13/11/03

Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

**IIS**

**புலமைப்பரிசில் திட்டம் 2004**

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(ஈ-1750)

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 27 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 18 (13.11.2003) வியாழக்கிழமை இதழ்:44

## ஹெல்கிசன் குழுவினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு!



கொழும்பு வந்துள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான தூதுக் குழுவினர், நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

விதார் ஹெல்கிசன், சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரே, ஜனாதிபதியுடனான நேற்றைய பேச்சுவார்த்தையில் பங்கேற்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலை, அதனால் சமாதான முயற்சிகளின் நிலை குறித்தும் நேற்றைய (10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சை முன்னெடுக்குமாறே ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேட்டேன்!

### தமிழ்க்கூட்டமைப்பினரிடம் பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பறித்த அமைச்சுக்களை மீளத் தருமாறு ஜனாதிபதியை நான் கோர வில்லை. சமாதான முயற்சிகளை முன்னெடுக்க உதவுமாறே அவரிடம் கேட்டேன் என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்பினரிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்த பிரதமரை - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று அலரி மாளிகையில் சந்தித்து ஜனாதிபதியுடன் என்ன பேசினீர்கள் எனக் கேட்டதற்கே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமரால் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்து பி.பி.ஸி. தமிழோசைக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அளித்த செவ்வியில் தெரிவிக்கப்பட்டதாவது -

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் (10 ஆம் பக்கம் பார்க்க)



### விண்ணாணம் விநாசியர்



முயற்சி பலிக்கேல்ல எண்டதும் எப்படியும் சொல்லலாம் தானே...!

## ஐக்கிய தேசிய கட்சி எம்.பிக்களுக்கு பணம் வழங்க முயற்சிக்கவில்லை

### பொ.ஐ.மு. எம்.பி. மேர்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பணம் கொடுத்து அவர்களை பொதுஜன ஐக்கிய முன்னணியின் பக்கம் கொண்டுவர முயற்சித்ததென்ற குற்றச்சாட்டை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மேர்வின் சில்வா மறுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை பொதுஜன ஐக்கிய முன்னணி பணம் (10 ஆம் பக்கம் பார்க்க)

# நேரடிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து நோர்வே தூதுக்குழு புலிகளுடன் இன்று ஆராய்வு!

### தலைவர் பிரபாவைச் சந்திக்கலாம் என்றும் தகவல்

(கொழும்பு)

**இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சிக்கு வரும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான தூதுக் குழுவினர், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து பேச்சு நடத்தவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

பிரதி வெளிவிவகார அமைச்சர் ... ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும் ... தலைப்புலிகளுக்கும் இடையேயான

## அமைச்சர் ஜயலத் வவுனியா விஜயம்!

படைநிலைகளைப் பார்வையிட்டார்

# தலைவர் பிரபாவைச் சந்திக்கலாம் என்றும் தகவல்

(கொழும்பு)

**இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சிக்கு வரும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான தூதுக் குழுவினர், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து பேச்சு நடத்தவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுடன் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும் கிளிநொச்சி செல்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை கொழும்பு வந்த இவர்கள் அரசுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக பல உயர்மட்டத் தலைவர்களுடனும், கண்காணிப்புக் குழுவினருடனும் பல்வேறு சந்திப்புக்களை நடத்தியிருந்தனர்.

நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் அலரிமாளிகையில் சந்தித்த இவர்கள், சமாதான பேச்சுக்களின் எதிர்காலம் குறித்தும் நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்தும் கலந்துரையாடி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ஒத்திவைத்த திகதிக்கு முன் நாடாளுமன்றத்தை கூட்டவேண்டாம்!

## எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி ஒத்திவைத்த திகதிக்கு முன்னதாக, நாடாளுமன்றைக் கூட்ட வேண்டாம் என, எதிர்கட்சிகளின் தலைவர்கள் சபாநாயகரை கோரியுள்ளனர்.

எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் ஐவர், சபாநாயகருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இதனைத் தெரிவித்துள்ளனர்.

அந்தக் கடிதத்தில் மேலும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு யாரும் என்னிடம் கோரவில்லை!

## என்கிறார் சபாநாயகர் மைக்கல் பெரேரா

(கொழும்பு)

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு மாறாக 19 ஆம் திகதிக்கு முன் நாடாளுமனறைக் கூட்டுமாறு யாரும் என்னிடம் கோரவில்லை என நாடாளுமன்ற சபாநாயகர் ஜோசெப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார். இவ்விடயம் குறித்து அவர் நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது - இம் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சர் ஜயலத் வவுனியா விஜயம்!

## படைநிலைகளைப் பார்வையிட்டார்

(வவுனியா)

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று வவுனியாவிற்குச் சென்று அங்குள்ள படைநிலைகள் மற்றும் சோதனைச் சாவடிகளை பார்வையிட்டார்.

நேற்றுக் காலை வவுனியாவிற்குச் சென்ற புனர்வாழ்வு மற்றும் அகதிகள் மீளக் குடியேற்ற அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன அங்கு படையதிகாரிகள் மற்றும் அரச அதிபர், வவுனியா மாவட்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழு பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

தொடர்ந்து ஓமந்தையில் உள்ள அரச படைகளின் முன்னரங்க நிலைகளுக்கும், விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவலரண்களுக்கும் விஜயம் மேற்கொண்டு, அவற்றைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து அங்கு படையினரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நேற்று மூன்று மணி நேரமாக நடைபெற்ற சந்திரிகா - ரணில் பேச்சில் முடிவில்லை!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற நீண்டநேர சந்திப்பு இணக்கம் எதுவும் எட்டப்படாமலேயே முடிவுற்றது.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை, விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் போன்ற விடயங்கள் குறித்து, கலந்துரையாட வருமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பின் பேரில், நேற்றுக் காலை ஜனாதிபதி மாளிகைக்குச் சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினார். நேற்றுக் காலை 11.30 மணியளவில் ஆரம்பமான இந்தப் பேச்சுக்கள், சுமார் இரண்டரை மணி நேரம் மிக இரகசியமான முறையில் நீடித்ததாகத் தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பு குறித்து அரசாங்க வட்டாரங்கள் தகவல் தருகையில்:

இந்தச் சந்திப்பு ஒரு கலந்துரையாடலே தவிர இந்தப் பேச்சுக்களில் எதுவித இணக்கமும் எட்டப்படவில்லையெனத் தெரிவித்தன.

இதேவேளை, இந்தச் சந்திப்பு குறித்து ஜனாதிபதி சந்திரிகாவும்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.
(சி -1753)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# சுற்றுலாப் பயணிகள் பேரூந்துடன் வைத்தியசாலை அம்புலன்ஸ் விபத்து

## நோயாளர் பயணிகள் உட்பட 8 பேர் காயம்

யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டியும், தென்பகுதியில் இருந்து வந்த சுற்றுலாப் பயணிகள் பேரூந்து ஒன்றும் விபத்துக்குள்ளானதில், மேலதிக சிகிச்சைக்காகச் சென்று கொண்டிருந்த நோயாளர் உட்பட 8 பேர் காயமடைந்தனர்.

யாழ்.கச்சேரிக்கு அண்மையாக, புங்கங்குளச் சந்தியில் நேற்று மாலை 2.50 மணியளவில் விபத்து நடைபெற்றது. தென்பகுதியான மாகோவிலிருந்து சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த பேரூந்தும் மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்களை கொழும்புக்கு கொண்டு சென்று கொண்டிருந்த யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டியுமே மோதியுள்ளன.

இந்தச் சம்பவத்தில் - மாகோ பகுதியிலிருந்து வந்த 6 சுற்றுலாப் பயணிகளான மாலதி (வயது 38), சில்லேன் (வயது 40), நிலம்மாக (வயது 76), நாவணி (வயது 38), றம்பன்டாக (வயது 40), கந்தோகாமி (வயது 50) ஆகியோரே காயமடைந்தனர்.

மேலதிக சிகிச்சைக்காக, யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற 9 பேரில்- உரும்பிராயைச் சேர்ந்த சி.ராசேந்திரன் (வயது 40) என்பவரும் காயமடைநதார். காயமடைந்த அனைவரும், யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விடயம் தொடர்பாக, யாழ். போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## ஒருங்கிணைந்த விழிப்புணர்வு

கிளிநொச்சியில் ஒருங்கிணைந்த விழிப்புணர்வும், ஒரு நாள் பொதுச் சுகாதார வேலைத்திட்டமும் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரியின் முகாமைத்துவத்தின் கீழ் இன்று நடைபெறவுள்ளது.

'வருமுன் காப்போம்' என்ற கருப்பொருளின் கீழ், டெங்கு ஒழிப்பு திட்டமும், விழிப்புணர்வுக் கருத்தரங்கும் மலேரியா ஒழிப்புத் திட்டம், நகர கடைத் தொகுதிகள், தேநீர்க் கடைகளின் பொதுச்சுகாதார பரிசோதனைகள், கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு, வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி மற்றும் பூச்சிக் குளிசைகள் வழங்குதல் என்பனவும் நடைபெறவுள்ளன. (108)

# புலமைப் பரிசில் வினாத்தாள்கள் யாழ். மாவட்டத்தில் திருத்தம்

முதன்முறையாக யாழ்.மாவட்டத்தில் 5 ஆம் ஆண்டு மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தப்படவுள்ளன.

இவ்வருடம் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் - யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் திருத்தப்படவுள்ளன. 2003 ஆண்டு சுமார் 9 ஆயிரம் மாணவர்கள் யாழ்.மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ளனர். புலமைப் பரிசில் விடைத்தாள்கள் திருத்துவதன் நன்மை கருதியும், பாடசாலை மாணவர்களின் நன்மை கருதியுமே இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## ஆனந்தசங்கரி மறுப்பு

ஜனாதிபதி தற்போது எடுத்த நடவடிக்கை சரியானதே என, சிங்களப் பத்திரிகை வெளியிட்ட செய்தி தவறானதென ஆனந்தசங்கரி மறுத்துள்ளார்.




பருத்தித்துறை 1 ஆம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின்

நடுவப்பணிமனை மேல்மாடி கட்டிடத்திறப்பு விழா அழைப்பிதழ்

பரு. பல. நோ. கூ. சங்கத்தின் நடுவப் பணிமனை மேல்மாடிக் கட்டிடம் நாளை 2003 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு வரும் சுபவேளையில் (புதிய நேரம்) சங்கத்தலைவர் திரு.ந.சிவ ஞானசுந்தரம அவர்களினால் திறந்துவைக்கப்படும்.

எனவே இவ்வைபவத்தில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பருத்தித்துறை,
10.11.2003

(சி-1793)

தலைவர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்.



பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

எமது ஸ்தாபனத்தின் 45ம் வருட பூர்த்தியை முன்னிட்டு 5% - 50% விலைக்கழிவு இம்மாதம் 15.11.03 - 31.01.04 வரை பாடசாலை, பல்கலைக்கழக பாடப் புத்தங்களுக்கு வழங்கப்படும். இப்பொழுது பாடசாலை தவிர்ந்த ஏனையவர்களுக்கும் டின்ஸ் கணக்குக் குற்றிகள் வழங்குகின்றோம். இன்றே விஜயம் செய்யுங்கள்.

பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள், உபகரணங்கள், பேப்பர் வகைகள், பெயின்ற் வகைகள் மற்றும் தரமான உள்ளீட்டுப் பொருட்களுக்கான மூலதனப் பொருள்கள், அழிபொருள்கள், வாத்தியக் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள், அலுவலக அலுமாரி, அலுவலக மேசைகள், பயில் அலுமாரி, கம்பியூட்டர் மேசைகள், புத்தக றாக்கைகள், ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள், O.H.P புறஜெக்ரர் மற்றும் 'அறிவு அமுது', 'அந்திவானம்' பதிப்பகங்களின் பதிப்புக்கள், வெளியீடுகள் யாவற்றையும் நீங்களே தெரிவுசெய்து ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

குறிப்பு:- எம்மிடம் டின் குற்றிகளுக்கு பதிவு செய்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

021 222 5542

212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-1794)


# தவறவிடப்பட்ட ஆவணங்களை பெற்றுக்கொள்ளவும்

தவறவிடப்பட்ட தேசிய, விசேட, தொழில் அடையாள அட்டைகள் என்பன கண்டெடுக்கப்பட்டு, நமது ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் வந்து உடன் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

**தேசிய அடையாள அட்டையையும், விசேட அடையாள அட்டையையும் தவற விட்டோர்:**

தபோதினி பரமசிவம் (வேம்படி மகளிர் கல்லூரி), செல்வரத்தினம் தேம்பா மலர் (நகுலேஸ்வரா வீதி, கீரிமலை), சந்திரராசா றோஸ்மலர் (நொத்தாரிஸ் வீதி, அரியாலை மேற்கு), சபாரத்தினம் சந்தானலட்சுமி (காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்), செல்வரட்ணம் பிரசாத் (22, செல்லர் வீதி, நல்லூர்), பொன்னையா தம்பிராசா (மல்வம், உடுவில்).

**தேசிய அடையாள அட்டையை மட்டும் தவற விட்டவர்கள்:**

நாகமுத்து தவராசா (உரும்பிராய் மேற்கு, கோண்டாவில்), சின்னத்துரை பார்த்தீபன் (குப்பிளான் தெற்கு), வாமதேவன் சொரூபகாந்தி (வளாகவீதி, திருநெல்வேலி), செல்லத்தம்பி தருமலிங்கம் (கரம்பன், ஊர்காவற்றுறை), மகேந்திரன் ஹம்சானந்தி (அண்ணா சிலையடி, அக்கராயன்குளம்), இராசதுரை மகேஸ்வரன் (பருத்தித்துறை வீதி, கோப்பாய்), பேதுருப்பிள்ளை ஜஸ்டின் விமலகுமார் (நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை).

**விசேட அடையாள அட்டைகளை மட்டும் தவற விட்டோர்:**

தேவகுமாரி மன்மதராஜா (கூவில், கீரிமலை), அமலநாதன் யூட் கொலஸ்ரிக்கா (3ஆம் வட்டாரம், எழுவைதீவு), சிவபாலரட்ணம் தனபாலசிங்கம் (அனந்தபுரம், புதிய செம்மணி வீதி, யாழ்ப்பாணம்), நடராசா கிருஸ்ணராசா (பங்களா ஒழுங்கை, மல்லாகம்), சின்னவன் வேலுப்பிள்ளை (சரசாலை தெற்கு, சாவகச்சேரி), சவிரி எஸ்தாம்மா (அம்பலப்புலம், நாரந்தனை வட மேற்கு), மகேந்திரன் சத்தியசீலன் (நாயன்மார் வீதி, நல்லூர்),

**தொழில் அடையாள அட்டைகளைத் தவறவிட்டோர் :**

நாகமுத்து தவராஜா (உரும்பிராய் மேற்கு, கோண்டாவில்), செல்லத்தம்பி தர்மலிங்கம் (வைரவப்புளியங்குளம், வவுனியா), கோபால் கமலராணி (கிராமசேவையாளர் பிரிவு J/38, அனலைதீவு), அமலநாதன் யூட்கொலஸ்ரிகா (கிராமசேவையாளர் பிரிவு J/39, எழுவைதீவு), தவகுலம் தர்சியா (சாவற்காடு, ஆனைக்கோட்டை), விமலசூரியர் விமலதாசன (பலாலி மேற்கு, வசாவிளான்).

இவற்றுடன், உடுவில் தெற்கு பாலாவோடையைச் சேர்ந்த கே.சிவாஜினி என்பவரின் ஹற்றன் நஷனல் வங்கியின் சேமிப்புக் கணக்குப் புத்தகமொன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், திருநெல்வேலி கலட்டிச் சந்திக்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் கடந்தமாத இறுதியில் ஒரு தொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டு 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அலுவலக நேரத்தில் உரியவர்கள் வந்து தமது ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

# மாவீரர் நாளை முன்னிட்டு பனம் விதை நடுகை

மன்னார் தமிழர் புனர்வாழ்வுக்கழக ஏற்பாட்டில் தமிழீழ தேசிய மாவீரர் நாளை முன்னிட்டு, பாப்பாமோட்டையில் பத்தாயிரம் பனம் விதைகள் நடுகை விழா நேற்று முற்பகல் 10 மணிக்கு சிறப்பாக நடைபெற்றது.

அண்மையில் புதிதாக அமைக்கப்பட்ட பாப்பாமோட்டை பலவமுனை கடற்கரை வீதியின் இரு மருங்கிலும் பத்தாயிரம் பனம் விதைகள் நடுகை செய்யப்பட்டன.

மன்னார் மாவட்ட உதவி ஆணையாளர் எம்.எல்.ஏ.தூரம், முதல் விதையை நாட்டிவைத்தார். இந்த நிகழ்வில்- மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் செ.சீசர், மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் ந.பத்மநாதன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மன்னார் மாவட்ட பொறுப்பாளர், விவசாய அமைப்பின் தலைவர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், ஊர்மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

# சுயதொழில் முயற்சிக்கு வட்டியில்லாக் கடன்!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம், குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு, சுயதொழில் முயற்சிக்காக 4 இலட்சத்து முப்பதினாயிரம் ரூபாவை வட்டியில்லாக் கடனாக வழங்கியுள்ளது.

வடமராட்சி கிழக்கில் கடற்படைத் தாக்குதலில் 241 குடும்பங்கள் குடும்பத்தலைவர்களை இழந்துள்ளன. இந்தக் குடும்பங்களுக்கு, முதற்கட்டமாக 24 குடும்பங்களுக்கு 4 இலட்சத்து முப்பதினாயிரம் ரூபாவை சுழற்சிமுறை வட்டியில்லாக் கடனாக வழங்கியுள்ளது.

இதில் - 20 குடும்பங்களுக்கு 15,000 ரூபா வீதமும், 2 குடும்பங்களுக்கு 25,000 ரூபாவும், 2 குடும்பங்களுக்கு 40,000 ரூபா வீதமும் வழங்கப்பட்டன.

சுழற்சிமுறையால் வரும் நிதியைக் கொண்டு, மற்றுமொரு தொகுதி குடும்பங்களுக்கு சுழற்சி முறையில் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படவுள்ளதென சமாசம் தெரிவித்தது.(17)


ராஜா யாழ்ப்பாணம்.
10.30, 2.30, 6.30 (பி.நே)
விக்ரம், சூர்யா, லைலா நடித்த
பிதாமகன்
இரவு 9.30க்கு மட்டும்
XXX (ஆங்கிலம்)
(சி-1751)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், தேவயானி நடித்த
ஒருவன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பி.நே.)
AMERICAN BEAUTY
(சி-1752)



நல்லூர் பிரதேச சபை
இறைச்சிக்கடைகள் கேள்விப்பத்திரம் 2004 ஆம் ஆண்டுக்கான சந்தைகள்
வழங்கும் கால எல்லை நீடித்தல்

மேற்குறிப்பிட்ட கேள்வி அறிவித்தலின் பிரகாரம் படிவம் வழங்கும் கால எல்லை கீழ்க்கண்டவாறு நீடிக்கப்பட்டுள்ளது.

அது சம்பந்தமான விபரங்களை 06.11.2003 நமது ஈழநாடு, 05.11.2003 உதயன், 04.11.2003 தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் பார்வையிடலாம். மேலதிக விபரங்களை நல்லூர் கொக்குவில் பிரதேச சபை உப அலுவலகங்களிலும் பிரதேச சபை தலைமை செயலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

கேள்விப்பத்திர விநியோகம் 19/11/2003 புதன்கிழமை 12.00 மணிவரை
கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதி 21/11/2003 வெள்ளிக்கிழமை 10.00 மணிவரை
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி 21/11/2003 வெள்ளிக்கிழமை 2.00 மணி

பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
நல்லூர்.
12.11.2003

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்
நல்லூர் பிரதேச சபை
(சி/1795)

# எம்மிடம் இருக்கின்ற மிகப்பெரும் பலம்தான் இன்றைய சமாதானத்திற்கு வழிகோலியது!

## பூநகரி 10 ஆம் ஆண்டு வெற்றி விழாவில் கேணல் சூசை



(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத்தலைவரின் தலைமையின் வழிநடத்தலில் எம்மிடம் இருக்கின்ற மிகப்பெரும் பலம்தான் இன்றைய சமாதானத்திற்கு வழி கோலியது எனக் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

பூநகரி படைத்தளம் - தமிழீழ விடுதலைப் புலிகளால் வெற்றி கொளளபட்டதன் 10 ஆம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு, பிரதம உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பல்வேறு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, அவை அடுத்த கணமே கிழித்தெறியப்பட்ட வரலாறுகளும் ஏராளம்.

வன்னியின் பெரும் பகுதியில் ஆக்கிரமித்திருந்த அரச படைகளை எதிர்கொண்டு, ஓயாத அலைகள்-3 இராணுவ நடவடிக்கையினை, விடுதலைப் புலிகள் நடாத்தி பெருவெற்றிகளை ஈட்டியநிலையில், அரசாங்கத்திடம் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு வந்தோம்.

யுத்தநிறுத்த காலங்களில் வலிந்த தாக்குதல்களை இராணுவத்தினர் மேற்கொண்டதால், பல போராளிகளை இழந்தோம்.

ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தம் முடிவுக்கு வந்த அடுத்தக் கணமே, சந்திரிகா அரசு தீச்சுவாலை என்ற பாரிய படைநடவடிக்கையை மேற்கொண்டு, பாரிய இழப்புக்களுடன் பெருந்தோல்வியைச் சந்தித்துக் கொண்டது.

இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்தினைத் தீர்க்கக்கூடிய ஒரு அரசைத் தெரிவுசெய்ததுபோல, இன்று எமது விடுதலைப் போராட்டத்தை இதுவரை காலமும் அவதானித்து வந்த அவதானிகளும், சட்ட ஆலோசகர்களும் அயர்லாந்தில் வைத்து ஒரு இடைக்காலத் திட்ட வரைபைத் தயாரித்து, நோர்வேத்தரப்பு ஊடாக அரசிடம் கையளித்துள்ளனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் குமரப்பா புலேந்திரன் உட்பட, பன்னிரு வேங்கைகளும் கைதுசெய்யப்பட்டு, அவர்களின் இழப்பின் அடுத்த கணமே இந்திய-புலிகள் போர் ஆரம்பமாகியது.

ஆனால், இன்று 18 மாதகாலமாக ஏற்பட்ட சமாதானத்தின்போது, கிட்டத்தட்ட 26 போராளிகளையும், 2 பாரிய கப்பல்களையும் இழந்தும், யுத்தநிறுத்தத்தை நாம் கடைப்பிடித்து வருகின்றோம்.

பூநகரிக் கோட்டை முகாம் அழிக்கபட்ட பின்னர், அடுத்தடுத்து ஏற்பட்ட இராணுவத் தோல்விகளும் தான், இந்தச் சமாதானத்திற்கு வழிகோலியது.

இராணுவமும், கடற்படையும் இந்த மண்ணில் நிலை கொண்டிருந்த காலத்தில், 300 இற்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களை, கடலில் வெட்டிப் படுகொலை செய்தன.

அவர்கள் வெட்டி எவ்வாறு ஒவ்வொரு படகுகளிலும் விடப்பட்டார்களோ, அதேநிலையில்தான் இங்கு நிலைகொண்டிருந்த ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும், இந்தக் கிளாலிக் கடலில் மிதக்கவிடப்பட்டனர்.

யுத்த நிறுத்தம் 18 மாதம் கடந்தநிலையிலும், 6 சுற்றுப்பேச்சுக்கள் பல நாடுகளில் நடந்துள்ளன. அதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் தேக்கநிலையில் இருக்கின்றன.

எமது மக்களின் அபிவிருத்தி, பொருளாதார ரீதியாக உங்களை மேம்படுத்தவேண்டும். அழிந்துபோயுள்ள பாடசாலைகள், கல்வி, மக்களின் வாழ்விடம் ஆகிய மூன்றையும் குறியாகவைத்து, மக்களின் இயல்பு வாழ்வைத் தோற்றுவித்துக் கொள்வதன் பொருட்டு, இதனை மேற்கொண்டு நடத்துகின்றோம்.

இதற்காகச் சிறப்பாக அமைக்கப்பட்ட சிரான் அமைப்பும் தற்போது செயலிழந்தநிலையில் உள்ளது.

4 ஆண்டுகளுக்கான திட்டவரைபைக் கொடுத்தபோது, சந்திரிகா அரசால் 3 அமைச்சுக்கள் பறித்தெடுக்கப்பட்டது.

அடுத்த கட்டம் - யுத்தநிறுத்தம், போர் நிறுத்த ஒப்பந்தம் கேள்விக்குறியாகிய நிலையிலுள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடம் வாக்குப் பெற்று, ஆட்சிக்குவந்த ரணில் அரசு - தற்போது தன்னிடம் அதிகாரம் இல்லை என்கிறது.

அதிகாரமுள்ள அரசே இப்பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். தீச்சுவாலை நடவடிக்கையின் பின்னர், ஆனையிறவுப் படைத்தளத்தை வெற்றிகொண்டு, ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அறிவித்ததன் பின்னர், நாம் பேச்சுவார்த்தைக்குத் தயார் எனத் தெரியப்படுத்தினோம்.

இதனைச் செவிமடுக்காத சந்திரிகா அரசு - ஆயிரம் கோடி டொலர் பெறுமதியான ஆயுத தளபாடங்களையும், வெளிநாட்டுப்படைகளின் பயிற்சியைப் பெற்ற படைகளையும் வைத்து நடத்திய இப்பெரும் நடவடிக்கைமூலம், மூவாயிரத்துக்கும் மேற்பட்ட படையினரை இழந்ததோடு, இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட படையினரை அங்கவீனப்படுத்தியும், தோல்வியைச் சந்தித்தும் பொருளாதார ரீதியாக கட்டுநாயக்க விமானப்படைத் தளம்மீது வீழ்ந்த அடியும் தான், இன்றைய சமாதானத்திற்கு வழிகோலியுள்ளது.

எமது பலம்தான் இன்றைய இந்தச் சமாதானத்திற்கு வழிகோலியுள்ளது என்றும், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை மேலும் தெரிவித்தார்.

### சதுரங்கப் போட்டி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏயின் வருடாந்த உள்ளக விளையாட்டின் 2003 ஆம் ஆண்டுக்கான சதுரங்கப் போட்டிகள் நேற்றிலிருந்து வரும் சனிக்கிழமை வரை மாலை 3.30 மணியிலிருந்து வை.எம்.சி.ஏயின் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறும். இப் போட்டிகள் வயதுக் கட்டுப்பாடுடையவர்களுக்கான ஆண், பெண் போட்டியாளர்களுக்கானது. திறந்த போட்டிகள் 17 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகும். இதில் வயது பிரிவில் கலந்து கொள்ளும் வீர, வீராங்கனைகளை நேர அட்டவணைக்கு ஏற்ப சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (205)

### விளையாட்டுப் போட்டி

வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தின் கீழ் இயங்கும் உடுத்துறை, செம்பியன் பற்று ஆகிய கிராமங்களிலுள்ள முன்பள்ளிகளின் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

செம்பியன்பற்று முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி இன்று நடைபெறும். (17)



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நோர்வேயின் பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இருவரும் நேற்றுமுன்தினம் சந்தித்தபோது எடுத்த படத்தைக் காணலாம்.

## பொலிஸார் மீது கிரனைட் வீச்சு ஒருவர் பலி; இருவர் காயம்!

### குருநாகலில் சம்பவம்

குற்றவாளியைப் பிடிக்கச்சென்ற பொலிஸார்மீது, கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதில், பொலிஸார் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றைய பொலிஸாரும், குற்றவாளியும் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது - குருநாகல் வெல்லவப் பகுதியில் பல குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நபர் ஒருவர், பதுங்கியிருக்கின்றார் என்ற தகவல் அறிந்து இரு பொலிஸார் அப்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

பொலிஸார் வருவதைக் கண்ட குற்றவாளி - அவர்கள் மீது கைக்குண்டொன்றை வீசிவிட்டுத் தப்பியோட முயன்றுள்ளார்.

அவர் வீசிய கைக்குண்டு வெடித்ததால், ஒரு பொலிஸார் காயமடைந்தார். மற்றவர் தொடர்ந்தும் குற்றவாளியைத் துரத்திச்சென்றுள்ளார்.

அந்தவேளை, இன்னுமொரு கைக்குண்டை வீசமுயன்ற குற்றவாளியுடன் கைகலப்பில் ஈடுபட்டவேளை, அந்தக் கைக்குண்டும் வெடித்ததால், பொலிஸார் உயிரிழந்தார். குற்றவாளி காயமடைந்தார்.

காயமடைந்த குற்றவாளியும், பொலிஸாரும் - குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (01)

### நேற்று அதிகாலை வேளையில்

## திருகோணமலை சிறைச்சாலையிலிருந்து நான்கு புலி உறுப்பினர்கள் கடத்தப்பட்டனர்

திருகோணமலை சிறைச்சாலைக்குள் புகுந்த சிலர், அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்களைக் கடத்திச் சென்றுள்ளார்கள்.

சிறைச்சாலைக்குள் நேற்று அதிகாலை 4 மணியளவில் புகுந்த குழுவினர் - சிறைச்சாலைக் கதவை உடைத்துக்கொண்டு இந்த நால்வரையும் அழைத்துச் சென்றுள்ளதாகத திருகோணமலை பொலிஸ் அதிகாரி தயா சமரவீர தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட பின்னர், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் நால்வரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

இவர்கள் சட்டவிரோதமான ஆயுதங்களை வைத்திருந்தர்கள் என்ற குற்றச்சாட்டின்பேரிலேயே, கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் இருவர் திருகோணமலையில் வைத்தும், மற்றைய இருவரும் மூதூர் கந்தளாய் பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாகச் சிறைச்சாலை அதிகாரிகளிடம் கேட்டபோது - அவர்கள் எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்கள்.

இதேவேளை, இது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நடத்தும் பொருட்டு அநுராதபுர சிறைச்சாலையின் உதவி அதிகாரி - திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகச் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் நூர்தீன் மசூர் தெரிவித்தார்.

இந்தக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு, எதுவித சேதமும் ஏற்படவில்லையென்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## விவசாய உபகரணங்கள் வழங்கல்!

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாதகல் தெற்கு J/151 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வறுமைக் கோட்டிற்குட்பட்ட விவசாயிகளுக்கு, 'மூவிமொன்டோ' நிறுவனத்தினால் விவசாய மூலப் பொருட்கள் அண்மையில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பிரிவைச் சேர்ந்த சுமார் 20 விவசாயிகளுக்கு, நெல், மண்வெட்டி, உரம் என்பன 'மூவிமொன்டோ' நிறுவனத்தினால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. (44)

## ஜனாதிபதியால் கைப்பற்றப்பட்ட அமைச்சுக்களின் வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டது!

(கொழும்பு)

படைத்துறை அமைச்சு, மற்றும் உள்துறை அமைச்சு ஆகியவற்றின்கீழ்வரும் 29 திணைக்களங்கள் தொடர்பான செயற்பாடுகளும், மற்றும் மக்கள் தொடர்பாடல் அமைச்சின்கீழ்வரும் நிறுவனங்களின் செயற்பாடுகளும், ஜனாதிபதி சந்திரிகாவின் நேரடிக்கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாக, நேற்று வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமும், 2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதமும் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தெரிவித்தே -

நேற்று இந்த வர்த்தமானியில் புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. கடந்த நான்காம் திகதி படைத்துறை அமைச்சு, உள்துறை அமைச்சு, மக்கள் தொடர்பாடல் அமைச்சு ஆகியவற்றின பொறுப்புக்களைத் தனது அதிகாரத்தின்கீழ் கொண்டுவருவதாக அறிவித்திருந்த ஜனாதிபதி சந்திரிகா, இன்று உத்தியோகபூர்வமாக இந்த அமைச்சுக்களின் கீழ் இயங்கும் திணைக்களங்கள், நிறுவனங்கள் யாவற்றின் மீதுமான தனது கட்டுப்பாட்டை, இந்த வர்த்தமானி அறிவிப்பின்மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, நிதியமைச்சு இன்னமும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் கீழேயே இருக்கின்ற நிலையில், ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள இந்த அமைச்சுக்களுக்குரிய நிதியினை - நிதியமைச்சு வழங்குமா என்கின்ற சந்தேகம் தற்போது எழுப்பப்பட்டுள்ளது.

முன்னர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்திலும் - பாதுகாப்பு அமைச்சு, நிதியமைச்சு ஆகியவற்றை ஜனாதிபதி சந்திரிகா தானே வைத்துக்கொண்டிருந்தபோதிலும், அப்போது இருந்த பிரதியமைச்சர்கள் - பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தமையால், நிதி தொடர்பான சிக்கல்கள் எழவில்லை.

தற்போது பிரதியமைச்சர்களை நியமிப்பதாக இருந்தால், அவர்கள் ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்தே தெரிவுசெய்யப்பட்டாக வேண்டும்.

அவர்கள் குறிப்பிட்ட அமைச்சுகளுக்குரிய நிதியை வழங்க மறுத்தால், ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுக்களும் தொடர்ந்து செயற்படமுடியாத முட்டுக்கட்டைநிலையே ஏற்படும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அமெரிக்க விமானப்படையினர் இலங்கைப் படையினருக்கு பயிற்சி

(கொழும்பு)

அமெரிக்க விமானப்படைப் பிரிவினரால் - இலங்கை விமானப்படையினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

நேற்றுமுன்தினம் முதல் அமெரிக்க விமானப்படையின் டீ.ஆர்.ஜி படைப் பிரிவைச் சேர்ந்த 31 அமெரிக்க ஆலோசகர்களால் - இலங்கை விமானப்படையின் பல பிரிவுகளைச் சேர்ந்த 120 விமானப்படையினருக்குப் பயிற்சி அளித்து வருகின்றனர். அமெரிக்காவின் விசேட விமானப்படை ஆலோசகர்கள் - இலங்கைக்கு வந்துள்ளது இதுவே முதற்தடவையாகும்.

விமானத்தில் இருப்பவர்கள் - விமானத்துக்கு ஆபத்து ஏற்படும் போதும் பழுதடையும்போது எவ்வாறு செயற்படவேண்டும் என்பது பற்றியே பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சிக்கான அனுமதியை, முன்னாள் பாதுகாப்பு அமைச்சரான திலக் மாரப்பன வழங்கியிருந்தார்.

இதேவேளை-

இலங்கை இராணுவத்தினருக்கான இராணுவப்பயிற்சிகளை அளிக்கவென, அமெரிக்க இராணுவ நிபுணர்கள் 100 பேர் அடங்கிய குழு இலங்கை வரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வாழ்க வளமுடன்

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### முதலாவது அகவையில்



பெயர் : வி.கோபிராஜ்
முகவரி : நீர்வேலி மேற்கு, கரந்தன்.

### முதலாவது அகவையில்



பெயர் : றொ.சாருகா
முகவரி : அல்வாய் வடமேற்கு அல்வாய்.

### இரண்டாவது அகவையில்



பெயர் : ச.பிரவீனா
முகவரி : மூளாய் கிழக்கு, சுழிபுரம்.

### மூன்றாவது அகவையில்



பெயர் : வி.வினோபா
முகவரி : நீர்வேலி மேற்கு, கரந்தன்.

### நான்காவது அகவையில்



பெயர் : ப.ஜெனேஷன்
முகவரி : நெடுந்தீவு, 1 ஆம் வட்டாரம்.

### மூன்றாவது அகவையில்



பெயர் : ஸ்.ஜொவ்றின் சஜித்
முகவரி : 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

### ஆறாவது அகவையில்



பெயர் : கு.நிருஜன்
முகவரி: 16, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### மூன்றாவது அகவையில்



பெயர் : பு.அருசியா
முகவரி : கனடா.

### எட்டாவது அகவையில்



பெயர் : சி.கர்ணிகா
முகவரி : கற்கோவளம், பருத்தித்துறை.

### மூன்றாவது அகவையில்



பெயர் : கி.அபிவர்ணன்
முகவரி : கிளிநொச்சி.

### பத்தாவது அகவையில்



பெயர் : ம.மரிய அனிற்றா
முகவரி : கச்சாய் வீதி, சாவகச்சேரி.

### மூன்றாவது அகவையில்



பெயர் : வி.யூட் அபிநயன்
முகவரி : பாஷையூர், யாழ்ப்பாணம்.

### பத்தாவது அகவையில்



பெயர் : ம.மரிய ஜெனிற்றா
முகவரி : கச்சாய் வீதி, சாவகச்சேரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

யாழ்.நகரில் தடைவிதிக்கப்பட்ட வீதியில்

# நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டது

வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்ட இடத்தில், நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களை - போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் - பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரதான நுழைவாயிலுக்கு முன்னாலுள்ள வீதிப்பகுதிகளில் - வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்குரிய அடையாள அறிவித்தல்களும் இடப்பட்டுள்ளன.

சிலர் இவற்றைப் பொருட்படுத்தாது, தடை விதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாகனங்களை நிறுத்துவதனால், வைத்தியசாலைப் பணிகள் சிலவற்றுக்கு அவை இடையூடாக அமைகின்றன. இவ்வாறு வாகனங்களை நிறுத்துவதால் ஆபத்தான நோயாளிகளை ஏற்றிக்கொண்டு வரும் அம்புலன்ஸ் வண்டிகள் - வைத்தியசாலைக்குள் நுழையமுடியாத நிலைஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்கள் - பல தடவைகள இது தொடர்பாக வாகன உரிமையாளர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளனர். இறுதியாக வைத்தியசாலை நிர்வாகம்- இது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் - பொலிஸ நிலையத்திற்குச் சென்று, தமது மோட்டார்சைக்கிள்களைப் பெற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. வாகன உரிமையாளர்கள் - பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)

## சின்னமடுவில் பொதுமண்டபம்

நியாப் திட்டத்தின்கீழ், சின்னமடுக் கிராமத்தில் பொதுமண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

சமூக வலுவூட்டல்மூலம் தெரிவு செய்யப்பட்ட இந்த மண்டபம் - பாரியளவில் அமைக்கப்பட்டு வருவதாகவும், இதனால் அப்பகுதி மக்கள் மிக நன்மையடைவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (44)

# வீடு உடைத்துத் திருடியவர்களுக்கு இரண்டு வருட சிறைத்தண்டனை

வீடு ஒன்றினை உடைத்து, நகைகளைத் திருடிய மூவருக்கு, இரு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையை யாழ்.நீதிமன்ற பதில் நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரத்தால் விதிக்கப்பட்டது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் குருநகரைச் சேர்ந்த மூவர், அதே பகுதியிலுள்ள வீடொன்றினுள், இரவு வேளையில் அதன் கதவை உடைத்து, உட்புகுந்து அங்கிருந்த பெறுமதிவாய்ந்த நகைகளைத் திருடினர். வீட்டு உரிமையாளர்கள் இது தொடர்பாகப் பொலிஸில் தெரிவித்த முறைப்பாட்டையடுத்தே, மூவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற விசாரணைகளின்போது, குற்றத்தை இவர்கள் ஒப்புக்கொண்டனர். இதனால், இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இருவருக்கு - ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத சிறைத்தண்டனையும், ஒருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சிறைத்தண்டனையும் விதிக் கப்பட்டது. ஆறுமாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட இருவரும் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆறுகால் மடத்திலுள்ள வயல்களில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுகின்றன

கடந்த சில தினங்களாக ஆறுகால்மடம் ஜே/88 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வயல்களில், கழிவுப்பொருட்கள் கொட்டப்படுகின்றது. மேற்படி விதைக்கப்பட்ட நெல் வயலகள் சிறுபயிர்களாக வளர்ந்துள்ளன.

இந்தநிலையில் - இறந்த விலங்குகள், விலங்குகளின் கழிவுகள், இவறறுடன் கழிவுப் பொருட்களும் கொட்டப்படுகின்றது. இதனால், ஆறுகால்மடம்- கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கருகிலுள்ள வயல்களே, பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதனால், மானிப்பாய் வீதியால் பயணம் செய்யும் பெருமளவான பயணிகள், பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

இது தொடர்பாகக் கிராம சேவையாளரிடம் - வயற் சொந்தக்காரர்கள் தமது பிரச்சினைகளை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (91)

## மணிக்கோபுரம் பிரதிஷ்டை

புலோலி வடமேற்கு அருள் மிகு வில்லிபாதி முருகன் ஆலயத்தில் - இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து, புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மணிக்கோபுரத்தின் காண்டாமணி - பிரதிஷ்டை செய்து, கலசகும்பாபிஷேகம் நடைபெற்றது.

அமைச்சர் தி.மகேஸ்வரன் புதிய மணியை ஒலிக்கச் செய்து, அதனை ஆரம்பித்து வைத்தார். (13)

## வீதி திருத்தப்படுகின்றது

இளவாலையிலிருந்து மாரீசன் கூடல் ஊடாக மாதகலுக்குச் செல்லும் வீதி, தற்போது திருத்தப்பட்டு வருகின்றது. இந்த வீதி கடந்த இருபது வருடங்களாக திருத்தப்படாது, குன்றும் குழியுமாகக் காணப்பட்டது. இந்த வீதியைத் திருத்தித் தருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு விடுத்த முறைப்பாட்டை அடுத்தே, இந்த வீதி தற்போது திருத்தப்பட்டு வருகின்றது. (41)

## விவசாய உபகரணங்கள் வழங்கல்

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயளர் பிரிவுக்குட்பட்ட மாதகல் தெற்கு ஜே/151 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த, வறுமைக் கோட்டிற்குட்பட்ட விவசாயிகளுக்கு - மூவிங் மொன்டோ நிறுவனத்தால், விவசாய மூலப்பொருட்கள் அண்மையில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி பிரிவைச்சேர்ந்த சுமார் 20 விவசாயிகளுக்கு நெல், மண்வெட்டி, உரம் என்பன மூவிங் மொன்டோ நிறுவனத்தினால் அண்மையில் வழங்கப்பட்டது. (44)

## இளவாலைப் பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்படுகின்றன.

இளவாலை - உயரப்புலம் பகுதியில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள், மிதிவெடிகள் ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தினறால் அகற்றப்பட்டு வருகின்றன.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளின் போது, இளவாலை - உயரப்புலம் பகுதியில், இராணுவத்தினர் அமைந்திருந்த பாரிய மண் அணையைச் சூழவுள்ள பகுதியில் கண்ணிவெடி, மிதிவெடி அபாயம் இருப்பதனால், விவசாயிகள் தோட்டம் செய்ய முடியாத நிலை நிலவுகின்றது.

இப்பகுதியில் உள்ள கண்ணிவெடி, மிதிவெடிகளை அகற்றி, தாங்கள் தோட்டம் செய்ய உதவுமாறு விடுத்த கோரிக்கைக்கு இணங்க, தற்போது இந்தப் பகுதியிலுள்ள கண்ணிவெடிகள், மிதிவெடிகள் என்பன ஹலோ ட்ரஸ்ட் மிதிவெடி அகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டு வருகின்றது. (41)

# தகவல் தொழில்நுட்ப யுகத்தில்

# கணினியைக் கலங்கடிக்கும் "வைரஸ்"

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

ஏனெனில், கணினி **Virus** ஆல் பாதிக்கப்பட்ட **Bios** பொதுவாகவுள்ள கட்டமைப்பில் (**Physically**) பாதிக்கப் படுவதில்லை. அதில் எழுதப்பட்டுள்ள கட்டளைத் தொகுப்பு மட்டுமே அழியும் அல்லது மாற்றப்பட்டுவிடும்.

ஆனால், **Bios Chip** இல் கட்டளைத் தொகுப்பைச் சாதாரணமாக எழுதமுடியாது. அதனை மீண்டும் எழுத, அதற்கென உருவாக்கப்பட்ட சிறப்புக் கருவியால் மட்டுமே முடியும். மேலும் **Bios** கோப்பினை (**File**) பிரதி செய்து (**Backup copy**), சாதாரணமாக யாரும் தொடர்ந்து வைத்திருக்கமாட்டார்கள்.

எனவேதான், மென்பொருளில் ஏற்படுகின்ற தாக்கத்தி



னைவிட, வன்பொருளில் ஏற்படுகின்ற தாக்கமானது, இலகுவாகப் பிரதியீடு செய்யமுடியாது போகின்றது.

இதுவரை நாம் கணினிகளைக் கலங்கடிக்கும் **Computer Virus** பற்றியே பார்த்தோம். இனி நாம் பார்க்கவிருப்பது இணைய இருப்பையே.

கேளவிக்குள்ளாகியுள்ள இணையத்தாக்குதலான "**CYBER WAR**" பற்றியதாகும்.

உலக வல்லரசுகளின் இராணுவக் கணினி வலைப் பின்னல்களின் பாதுகாப்புத் தடைகளை உடைத்து, அந்த **Network** இல் இருக்கும் கணினிகளையும், அக்கணினிகளால் கட்டுப்படுத்தப்படும் செயற்கைகோள்களையும் செயலிழக்க வைக்கும் முயற்சியில், இன்று பல **Hacker** குழுக்கள் - உலகின் பல மூலைகளிலிருந்து, இயங்க ஆரம்பித்துள்ளன.

அதேவேளை, இந்த **Hacker** குழுக்களால் உடைக்க முடியாதபடி - கணினி வலைப்பின்னல்களின் பாதுகாப்பை அதிகப்படுத்துவதற்காக, வல்லரசுகள் பெருந்தொகையான பணத்தைச் செலவிடுகின்றன. இப்படி **Hacker** குழுக் களுக்கும், வல்லரசுகளுக்குமிடையே நடக்கும் நவீன யுததமே - சைபர் யுத்தம் (**cyber war**) ஆகும்.

1999 ஆம் ஆண்டு அமெரிக்கா - யூக்கோஸ்லாவியாவில் (**yogoslavia**) ஆகாயத் தாக்குதலை ஆரம்பித்து, மூன்று நாட்களில் அமெரிக்காவிற்கு எதிரான **cyber war** ஆனது, சேர்பிய கணினி **Hacker** குழு ஒன்றினால் **NATO** வினுடைய கணினி வலைப்பின்னலைச் செயலிழக்க வைக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது.

"**Ping Attack**", **e-mail Bomb**" எனும், சைபர் யுத்த ஆயுதங்களைப் பாவித்து நடாத்தப்பட்ட யுத்தம், சேர்பிய **Hacker** குழுவுக்கு வெற்றியையே தந்தது. ஏனெனில், அமெரிக்கா இப்படிப்பட்ட யுத்தத்தினை எதிர்பார்க்கவோ அல்லது அப்பொழுது அதனைச் சமாளிக்கும் திறனையோ கொண்டிருக்கவில்லை.

"**ping Attack**" என்பது- **internet** உடன் இணைக்கப்பட்ட ஒரு கணினியைத் தொடர்ந்து **Chain Ping** செய்வதன் மூலம், அந்தக் கணினியைச் செயலிழக்கவைப்பதாகும். இந்த முறையால், **NATO** வினது இணையப் பக்கத்தை வைத்திருந்த கணினியானது, செயலிழக்கச் செய்யப்பட்டது.

"**e-mail bombs**" என்பது - அதிக தகவற்கொள்ளளவுடன், ஆயிரக்கணக்கான **e-mail** களை அனுப்புவதன்மூலம், ஒரு **e-mail** ஐ விநியோகிக்கும் கணினியைச் செயலிழக்க வைப்பதாகும். இந்த முறையால், **NATO** வினது மின்னஞ்சல் (**e-mail**) விநியோகிக்கும் கணினியானது, செயலிழக்கச் செய்யப்பட்டது.

பிரிட்டனில் இராணுவச் செயற்கைக்கோள் **Network** ஐ ஒரு **Hacker** குழு கைப்பற்றமுயன்று, தோல்வியுற்றது. ஆனால், தொடர்ந்து இப்படியான சைபர் தாக்குதல்கள் நடந்த வண்ணமே இருக்கின்றன.

சாவதேச பொலிஸான **Interpol** இன் கணிப்பின்படி- உலகில் இன்று 17 மில்லியனுக்கும் மேற்பட்ட **Hacker** கள் இருக்கின்றார்கள். அதுமட்டுமன்றி, இணையத்தில் 30,000 இற்கும் மேற்பட்ட **Hacker** குழுக்கள் தொடர்பான இணையப் பக்கங்கள் இருக்கின்றன.

இன்று நடக்கும் இந்த சைபர் யுத்தத்தில், வெற்றி யாருக்கென்று எவருக்குமே தெரியாது. ஆனால், இதனுடைய பக்க விளைவுகள் வழமையான ஒரு யுத்தத்தைப் போன்று, படு பயங்கரமானதாகவே இருக்கும். இந்நிலைமையானது - இணையத் தீவிரவாதிகளின் பெருக்கத்துக்கு வழிவகுத்து விடுகின்றது. இது உலக நாடுகளின் அரசியல், பொருளாதார சீர்குலைவுகளுக்கும் வழிவகுக்கின்றது.

இணையத்தளங்களில் அனுமதி இல்லாமல் புகுந்து, அட்டகாசம் செய்பவர்களையே இணையத்தீவிரவாதிகள் என்று அழைக்கின்றோம். ஒரு இணையத்தளத்திற்குள் சட்டவிரோதமாக அனுமதி இல்லாமல் சென்று, அத்தளத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து, அந்த இணையத் தளத்திலுள்ள தகவல்களை மாற்றி எழுதிவிடுவார்கள் அல்லது குறிப்பிட்ட இணையத்தளம் உள்ள **Web server** ஐ செயல் இழக்கச் செய்வதன்மூலம், இணையத்தளத்தை ஒருவரும் அணுகாது தடுப்பார்கள்.

இதற்குச் சிறந்த உதாரணமாக - 2001 ஆம் ஆண்டு தைமாதம் இலங்கை இராணுவம் பற்றிய இணையத்தளம் தொடங்கப்பட்ட சில மணித்தியாலங்களிலேயே, அது செயலிழந்து போனதைக் குறிப்பிடலாம். ஆனால், இத்தளமானது, பாரிய முயற்சியின் பின், பலமணித்தியாலங்கள் தாமதமாக மீண்டும் செயற்படத்தொடங்கியது.

இதேபோன்று, 2000 ஆம் ஆண்டு மிகப் பிரபல்யமான **Yahoo.Com** என்ற இணையத்தளம் - இணையத் தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டது. இதனால், இத்தளத்தினைப் பலமணிநேரமாக ஒருவராலும் அணுக முடியாதநிலை ஏற்பட்டது.

இதேபோன்று, மிகப்பிரமாண்டமான எடுப்பில் 2001 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட பெரும்பாலான இணையத்தளங்கள் ஸ்தம்பித்துப்போய்விட்டன. இணையக் கணினி - கிருமினல்களின் கைகளால், எந்தளவுக்கு ஆளப் படுகின்றது என்பதும் உலகம் தெரிந்து கொண்டது - அன்றைய தினத்தில்தான்.

**DNS (Domain Name Service)** வழங்கும் 13 பிரதான **Servers** - படுபயங்கரமான தாக்குதலுக்கு உள்ளாகின. இது இணையத்தின் சரித்திரத்திலேயே மிகப்பெரியதொரு தாக்குதல் எனக்கருதப்படுகின்றது.

இணையத்தின் இயக்கத்திற்கு இந்த **Servers** மிக முக்கியமானவை. இணையத்தால் வழங்கப்படும் சேவைகள் அனைத்துமே இங்கிருந்துதான் எமது கணினிகளை வந்தடைகின்றன. இவை தடைப்பட்டால், இணையமே தடைப் பட்டதுபோலாகும்.

பாதிக்கப்பட்ட 13 **Servers** களும் - உலகம் முழுவதும் பரந்து அமைக்கப்பட்டிருந்தன. புயல், நிலநடுக்கம் போன்ற இயற்கைக் காரணிகளாலோ அல்லது குண்டுவெடிப்பு, விபதது போன்றவற்றினாலோ அவை பாதிப்படையாது இருக்கவே, இவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், இந்த பாதுகாப்பு கட்டமைப்புத் தந்திரங்கள் அனைத்துமே - அண்மையில் நிகழந்த இணையத்தாக்குதல்களால் கேள்விக்குறியாகி விட்டன. எனினும், இத்தாக்குதலானது, முழுமையாக வெற்றியளிக்காமை ஒருநல்ல சகுனமாகும்.

இத்தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட யுக்தி - **DDOS (Distributed Denial of Service)** என அழைக்கப்படுகின்றது.

**DDOS** என்பது, இணையப் பயன்பாட்டின்போது, கணினிகளுககிடையில் தகவல் பரிமாற்றம் நிகழ்கிறது. ஒரு கணினி, இன்னொரு கணினியிடமிருந்து தகவல்களை எதிர்பார்க்கும்போது, தகவலைக்கேட்டு, தகவல் துண்டுகளை அனுப்புகின்றது. அளவே இல்லாமல், **Packets** தொடர்ச்சியாக அனுப்பப்பட்டால், தகவல் வழங்கும் கணினி அந்தவேகத்தில் தகவலை வழங்கமுடியாது திணறி செயலிழந்து போகலாம். இதனால், அந்தக் கணினியின் தொடர்ச்சியான பாவனை ஸ்தம்பித்துப்போகும். இதுவே **DDOS** எனப்படுகின்றது.

இனி நாம் இணையத்தளங்கள் செயலிழந்து போவதற்கான பொதுவான சில காரணங்களைப் பார்ப்போம்.

### ஏராளமான காரணங்களை அனுப்புதல்

ஒரு இணையத்தளம் உள்ள **wed server** இற்கு ஏராளமான மின்னஞ்சல்களை ஒரே நேரத்தில் அனுப்புவதன் மூலம், அந்த இணையத்தளம் உள்ள இணைய **server** ஐ செயலிழக்கச் செய்யலாம்.

### அதிகமானோர் பார்வையிடுதல்

ஒரு இணையத்தளத்தினை ஒரேநேரத்தில் பார்வையிடுவோரின் எண்ணிக்கை அதிகரித்தாலும், அந்த இணையத் தளத்திற்குரிய இணைய **server** செயலிழந்துவிடும்.

மேற்கூறப்பட்ட இரு விடயங்களும், எல்லாத் தளங்களுக்கும் பொருத்தமானவை அல்ல. இணைய **server** இன் வினைத்திறனைக் கூட்டுவதனூடாக, இப்பிரசசினையினை இலகுவாகக் கையாண்டு, தீர்வினைக் கண்டுவிடலாம்.

### Login name, password ஐ எடுத்தல்

குறிப்பிட்ட இணையத் தளத்திற்குரிய **Login name, password** என்பவற்றை எடுத்து, அந்த இணையத் தளத்தினைத் தங்களது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து, இணையத்தினைச் செயலிழக்கச்செய்தல்.

இவர்கள் இந்தச் செயற்பாட்டினைச் செய்யும்போது, தாம்பிடிபடக்கூடாது என்பதற்காகத் தமது சொந்த இணையக் கணக்கைப் பயன்படுத்தமாட்டார்கள்.

மாறாக ஒரு **proxy server** மூலமாகவோ அல்லது **telnet** என்ற வசதியைப் பயன்படுத்தியோ, வேறொரு கணினியிலிருந்து தமது கைங்கரியத்தினைப் புரிவார்கள்.

சே. ஜெயானந்தன்
வருகை விரிவுரையாளர் (கணினி)
தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | திருநெல்வேலி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 25/= | * | 40/= | 30/= | 40/= | 35/= | 30/= |
| வெண்டிக்காய் | 07/= | 30/= | 35/= | 20/= | 20/= | 15/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 65/= | 80/= | 65/= | 70/= | 65/= | 60/= | 65/= |
| கத்தரிக்காய் | 35/= | 40/= | 30/= | 30/= | 40/= | 30/= | 30/= |
| பாகற்காய் | 40/= | 40/= | 60/= | 50/= | 60/= | 35/= | 60/= |
| கரட் | 30/= | 60/= | 65/= | 40/= | 40/= | 40/= | 40/= |
| பீற்றூட் | 20/= | 30/= | 30/= | 20/= | 20/= | 20/= | 20/= |
| முருங்கைக்காய் | 40/= | 40/= | * | 30/= | 50/= | 30/= | 40/= |
| வெங்காயம் | 40/= | 45/= | 40/= | 35/= | 40/= | 35/= | 35/= |
| பச்சை மிளகாய் | 30/= | 40/= | 45/= | 40/= | 40/= | 40/= | 20/= |

# விலைபேசக்கூடியவர்களாக கலைஞர்கள் மாறக்கூடாது


செ.பாலச்சந்திரன்

திருநெல்வேலி - அரசடி வீதியில். காளிகோயில் உள்ளது. இந்தக் கோயிலை அண்மித்த பிரதேசங்களில், பல சிற்பாலயங்கள் இயங்கி வருகின்றன. இலங்கையின் மரச்சிற்பச் சக்கரவர்த்தி என அழைக்கப்பட்ட காலஞ்சென்ற செல்லையா - கந்தசாமீயின் சிறிவாணன் சிற்பாலயத்தைத் தற்போது நடாத்திவரும் செல்லையா-பாலச்சந்திரனைச் சந்திக்கிறோம். இனிமையான வரவேற்புடன் எம்மைப் பற்றியதான சிறு அறிமுகத்துடன், செவ்வியை ஆரம்பிக்க முன்னர், பாலச்சந்திரன் பற்றிய சிறு அறிமுகம்.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த பாலச்சந்திரன் - கடந்த 20 வருடங்களாக மரச்சிற்பத்தொழிலை மேற்கொண்டாலும், 5 வருடங்களாக சிறிகாளிகா சிற்பாலயத்தை (சிறிவாணன் சிற்பாலயம்) நடாத்தி வருகிறார். தேர், கைலாசவாகனம் இவற்றைச் செய்வதில் யாழ். நகரில் மட்டுமன்றி, வன்னிப் பிரதேசத்திலும் தனக்கெனத் தனியான முத்திரையைப் பதித்துள்ளார்.

எமது செவ்வியை ஆரம்பிக்க முன்னர், உபசரிப்பிற்காக வழங்கப்பட்ட குளிர்பானத்தை அருந்திவிட்டு, இனிமையான பொழுதில் எமது கேள்விகளை ஆரம்பித்தோம்.

**இத்துறையில் நீங்கள் ஈடுபட உந்துதலாக அமைந்த காரணிகள் பற்றி கூறுவீர்களா என வினவியதற்கு -**

சிறுவயதில் ஆலயங்களுக்குச் செல்லும் போது - கோயில் தேர், அதன் வேலைப்பாடுகள், தெய்வ ஊர்திகள் இவற்றை மிகவும் உன்னிப்பாகப் பார்த்து, எனக்குள்ளே ஆனந்தப்படுவேன்.

எனது மாமா மற்றும் உறவினர்களின் சிற்பாலயங்களுக்குச் சென்று, அவர்களது வேலைகளையும் பார்த்து, நானும் இவ்வாறான வேலைகளைச் செய்யவேண்டும் என்ற மனநிலை ஏற்பட்டதும், எனக்குக் கலையின் மீதிருந்த மரியாதை, ஆர்வம் இவற்றின் ஒட்டுமொத்த வடிவத்துடன் - காலாநிதி தங்கம்மா, அப்பாக்குட்டியின் தூண்டுதலும், அரவணைப்புமே நான் இத்தொழிலில் உள்நுழைந்து, இன்று இவ்வாறு இருக்கிறேன் என்றார்.

**இத்தொழில் முறைபற்றி எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?** எனக்கேட்டதும்,

தேர் செய்வதற்கு வேம்பு, மகோக்கனி, மருது, இலுப்பை இப்படியான மரங்கள் உபயோகிக்கப்படுகிறது. தேர் செய்யும்போது, மூலஸ்தான காற்பிரவை அளவை, பங்கு வீதமாக்கி, இவற்றுடன் தேரின் உயரத்தையும் தீர்மானித்து, பின்வரும் சில முறைகளில் தெயவங்களின் தன்மைக்கேற்ப பிரித்து நோக்க முடியும்.

- வட்டமுறை (வெசிரம்) - பிள்ளையாருக்குரியது.
- திராவிடம் - அம்பாளுக்குரியது.
- ஆந்திரமரபு - முருகனுக்குரியது.
- நாகரம் - சிவனுக்குரியது.

போன்ற மரபுமுறைகள் தேர் செய்யும் போது, பின்பற்றப்படுகிறது. தெய்வ வாகனங்கள் - பலாமரம், மாவிலங்கை, தேக்குமரம் போன்ற மரங்களினால் செய்யமுடியும்.



சப்பறம், மஞ்சம் இவைகளும் செய்து வருகின்றோம். இவற்றுடன் கைலாச வாகனம், மகரயாழி போன்ற சிற்பச் செதுக்கு வேலைகளைச் செய்து வருகின்றோம் எனக் கூறும் பாலச்சந்திரனிடம் -

**உங்களை கலை உலகிற்கு இனம் காட்டிய படைப்பினையும், உங்களைக் கவர்ந்த உங்கள் படைப்புக்களையும் கூறுவீர்களா?** என வினவியதற்கு -

வன்னி மாவட்டத்தின் ஊற்றங்கரைப் பிளளையார் கோயிலின் தேரே - எனக்கு முதல் வெற்றியைப் பெற்றுத்தந்தது. முதல்முதலாக பிள்ளையாரின் தேர் செய்வதற்கு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. ஆனால், எனக்கு அந்த வாய்ப்பைத் தந்து, என்னை முழுமையாக்கிய கோயில் நிர்வாகத்தை நன்றியோடு நினைவு கூறுகிறேன்.

தொடர்ந்தும் கைலாசவாகனம், கைலையங்கிரிமலையை இராவணன் தூக்கிய காட்சி இவற்றுடன் மயில், புலி, சிங்கம், சூரன் போன்ற உருவங்களையும், சுட்டிபுரம் அம்மன் கோயீல், முனீஸ்வரம் (சிலாபம்), நயினாதீவு நாகபூசனி, நீர்வேலி கந்தசுவாமி கோயில் (கைலாசவாகனம்) போன்ற தலங்களில் எனது தொழிலாளர்களின் பூரண ஒத்துழைப்புடனும், அவர்களது நிதானமான கடமை உணர்ச்சியுடனுமே தேர்களைச் செய்துள்ளோம். எனது முழுமுயற்சிகளுக்கும் அன்றும், இன்றும், பக்கபலமாக இருந்து ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கிவரும் மு.மோகநாதன், ம.விஜயரெட்ணம் ஆகியோரின் துணை கிடைத்தற்கரிய பேறு எனக்கூறும் பாலச்சந்திரனிடம் -

**இந்தியச் சிற்பாசாரிகளின் வருகை பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள் -** என வினாவியதற்கு -

இந்தியக் கலைஞர்களுக்கு நிகராக வேலை செய்யக்கூடியவர்கள் இங்கு இருக்கிறார்கள். என்னதான் இருந்தாலும் - இந்திய மண்ணிற்கும், கலைஞர்களுக்கும் ஒரு தனித்துவம் உண்டு. இதை மறுக்கமுடியாது. தேரின்மேல் விதானம், கவர்ச்சியான அமைப்புமுறை இவைகளை எம்மவரே சிறப்பாகச்செய்வர். கலைஞர்கள் பற்றாக்குறையும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து போகக்கூடிய வசதி அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளமையும் இந்தியக் கலைஞர்கள் இங்கு வருவதற்குரிய காரணமாகும் எனத் தனது கருத்தை சொல்லும் பாலச்சந்திரனிடம்.

**உங்கள் குரு பற்றியும், குருபக்தி பற்றியும் எங்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?** என்றதும் -

எனது குரு செல்லையா கந்தசாமி. இவரிடம் தொழில் பழகியவர்களில், 20 இற்கு மேற்பட்டோர் தனித்தனியாகவும், குழுவாகவும் சிற்பாலயத்தை நடத்திவருகிறார்கள். அதில் நானும் ஒருவன். அவரது நோக்கம் - எமக்கு வேலையை நுட்பமாக, அதேவேளை பயபக்தியாக பழக்கவேண்டும் என்பதே. மாறாக, எமக்கு தரும் கூலிக்காக வேலை வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படுபவர் அல்ல. வடக்கிலே பேசக்கூடிய ஆச்சாரியார் என்றால், அது எமது குருவாகத்தான் இருந்தார். இனிவரும் காலங்களிலும் இவரைப் போன்ற திறமையான, நிதானமான சிற்பாசாரியர்கள் வருவது மிகக்குறைவு என்றே நினைக்கின்றேன். நான் இவ்வாறு இருப்பதற்கு எமது குருவின் ஆசியும், அன்பான வழிநடத்தலுமே காரணமாகும். குரு எமக்குக் கிடைத்தமை - நாம் பெற்றபெரும் பாக்கியம் என்றே கூறவேண்டும் என நிதானமாகப் பதிலளித்தவரிடம்-

**இன்றைய நிலையில் உங்கள் கலை - கலைஞர்கள் பற்றி நீங்கள் கூற விரும்புவது என்ன?** என வினாவியதற்கு -

அன்று இருந்தநிலை இன்று குறைந்து கொண்டே போகிறது. கலைஞர்கள் விலைபேசக்கூடிய தொழிலாளர்களாக மாறிவருகின்றார்கள். இந்தநிலை மாறவேண்டும். இன்றைய பெரும் சிற்பிகள் - இளம் தலைமுறையிடம் தேரின் பொறுப்பை ஒப்படைக்கவேண்டும். இதன்மூலம், இளம் சிற்பிகளை உருவாக்கவேண்டும். நீ எங்கே தேர் செய்தாய்? என்ற கேள்வி இல்லாது, அவர்களின் திறமைக்கு மதிப்பளிக்கவேண்டும். அவர்களின் செயற்பாடுகளைத் தட்டிக்கொடுக்க வேண்டும். இதன்மூலம், திறமையான இளம் சிற்பக் கலைஞர்களை - நாம் பெற்றுக் கொள்ளமுடியும். தொழிலைப் பழகுபவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. இதற்கு வெளிநாட்டு மோகமும் ஒரு காரணமாகலாம். தொழிலைப் பழகுபவர்களுக்குப் பயவுணர்வு அற்றுப்போகிறது. தேடிப்போய் வேலைசெய்த நாங்கள்- இப்போ தேடிவந்து நீங்கள்தான் வேலை செய்யவேண்டும் என்ற நிலைக்கு எங்களின் பாணி, தத்துவம், நம்பிக்கை, செம்மையான செயற்பாடுகள் உள்ளன. இவற்றை ஒவ்வொரு கலைஞனும் வளர்த்துக் கொள்ளவேண்டும். ஆளுமையும், நிர்வாகப்பொறுப்பும், பூரணகையாளுகையும் - ஒரு கலைஞன் விரும்பியோ, விரும்பாமலோ பின்பற்றவேண்டுமெனச் சற்று வித்தியாசமானமுறையில் பதிலளிக்கும் பாலச்சந்திரனிடம் -

**நீங்கள் பெற்ற விருதுகள் பற்றி எங்களுடன் பகிர்ந்து கொள்ளமுடியுமா?**

பல பதக்கங்களைப் பெற்றுள்ளேன். பொன்னாடை கௌரவிப்பும் நிறையவே பெற்றுள்ளேன். இவற்றுடன், இளம் கலைமாமணி, தேர் நிர்மாணச்சிம்மம், பர்வத சிற்பபானு இவ்வாறு தனது விருதுகள் பற்றிப் பெருமையாகப் பேசும் பாலச்சந்திரனிடம் -

**நாம் செவ்வியை நிறைவு செய்யும் நோக்கில் இக்கலைபற்றி இளம் கலைஞர்களுக்குக் கூறவிரும்புவது என்ன?**

இக்கலையைத் தெய்வீகமான முறையில் பயிலவேண்டும். அதிகளவில் சம்பாதிக்கவேண்டும் என்றநோக்கம் இல்லாது, வேலையைப் பூரணமாகச் செய்து, அவர்களின் மனநிறைவையே பெறவேண்டும். ஒழுக்கம் மிகமுக்கியமாகும். போட்டி, பொறாமையற்று, விசுவாசத்துடன் தொழிலை மேற்கொள்ளவேண்டும். பொறுமையாக இருந்து நேர்த்தியான வேலைகளைச் செய்யக்கூடியவர்களாக வளரவேண்டும்.

முதலாளி - தொழிலாளி என்ற வேறுபாடின்றி செயற்படவேண்டும். அவர்களுக்குப் பூரணசுதந்திரம் கொடுக்கவேண்டும். தொழிலாளர்களின் ஆலோசனைகளையும் பெற்று, அவர்களுக்கும் மதிப்பளித்து செயற்பட்டால், அவர்களின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும் என்றார்.

சிறிது இடைவெளியின் பின்னர் - தான் சிற்பம் தொடர்பாக மேல்நிலைக் கல்வியைக் கற்கவிரும்புவதாகவும், இது தொடர்பான தேடலை மேற்கொள்ளவேண்டும் என்ற எண்ணம் இருந்தும்- காலமாற்றமும், வேலைகளைத் திருப்தியாக உரிய காலத்தில் ஒப்படைப்பதாலும் மேற்கொள்ள முடியாதுள்ளது எனக்கூறி, தனது குருவின் அன்பான வழிநடத்தலினால் பெற்ற அனுபவமும், அவரது ஆசியும்- தங்கம்மா அப்பாக்குட்டியின் தூண்டுதலும், நம்பிக்கையான வார்த்தைகளும்- துர்க்காதேவியின் அருளும் எனக்கு கிடைத்ததுபோல், ஏனையவர்களுக்கும் கிடைக்கவேண்டும். தன்நம்பிக்கையும், ஆளுமையும், ஒத்துழைத்துச் செயற்படுத்தும் தன்மையும் - ஒவ்வொரு சிற்பாசாரியர்களும் வரவேண்டும். எமது கலையை இளம் சிற்பக்கலைஞர்களுக்குரிய முறையில் தூய்மையான வழியில் புகட்டவேண்டும். என்றுகூறி தனது செவ்வியை நிறைவுசெய்தார்.

*(காவலூர்-விஜேந்திரன்)*


## தொழில் வங்கி

| | |
|---|---|
| நிறுவனம் | பதிவாளர் நாயகம் திணைக்களம் - யாழ்ப்பாண மாவட்டம். |
| வெற்றிடமாக உள்ள பதவிகள் | விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி. - யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பளை, மருதங்கேணி, சண்டிலிப்பாய், ஊர்காவற்றுறை, காரைநகர், வேலணை, நெடுந்தீவு, பருத்தித்துறை, கரவெட்டி. |
| அடிப்படைத் தகுதி | - உரிய பிரிவினுள்ள நிரந்தர முகவரி<br>- வயதெல்லை 21 -60<br>- விவாகமானவர்.<br>- ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கமுடியும்.<br>- கல்வி மற்றும் ஏனைய தகைமைகள், உரிய மாவட்ட, மேலதிக மாவட்டப் பதிவாளர், பிரதேச செயலர், கிராம அலுவலர், அலுவலகங்களிலும், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற இடங்களில் தெரிந்து கொள்ளலாம். |
| விண்ணப்ப முடிவு திகதி | 30.11.2003 |

தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.



## விவசாயப் பெருமக்களே!

**தமிழர் தாயகம் செழிக்கப் பாடுபடும் வேளாண் மக்கள் நீங்கள்.**

விவசாயம் தொடர்பாக உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்கள், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு.

உங்கள் கேள்விகளைக் குறிப்பிட்டு

**உழவர் உலகம்**
**'நமது ஈழநாடு'**
**267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரியுடன் நேரிலோ, தபால் மூலமோ உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.

உங்கள் கேள்விகளை உரிய துறைசார்ந்தவர்களிடமும் மற்றும் விவசாயபீடம் - தகவல் தொடர்பு மையத்திடமும் சமர்ப்பித்து, உரிய ஆலோசனை பெற்று 'உழைப்போம் உயர்வோம்'- தொழில் மலர் மூலம் உங்களுக்கு வழங்கவுள்ளோம்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதுஓர் நோய்

-திருக்குறள்.

## நமது நோக்கு

# அவர்களின் சந்திப்பும்... எங்களின் சிந்திப்பும்...

சமாதான நடவடிக்கைகளின் எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறது? இதுவே இப்போது தேசிய மட்டத்தில் மட்டுமல்லாது, சர்வதேச மட்டத்திலும் கேட்கப்படும் விடைகாணாச் சிக்கலான வினாவாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினை இதுவரைகாலமும் சிறிலங்கா அரசால் கூறப்பட்டு வந்ததுபோல், வெறுமனே ஒரு உள்நாட்டு பயங்காரவாத பிரச்சினை என்ற பொய்மையினின்றும் மாறி அரசியல் ரீதியாக, பேச்சுவார்த்தைமூலம் சர்வதேசத்தின் ஆதரவு மற்றும் அனுசரணையுடன் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்ற மெய்மைநிலையை உலக சமூகம் புரிந்து கொண்டுள்ளமையே இதற்கு காரணமாகும்.

இன விவகாரத்திற்கான சமாதானப் பேச்சுவார்த்தைகளை, முன்னெடுப்புக்களை மேற்கொள்ள அதற்கான ஏற்பாட்டாளராக நோர்வேயை அதன் அனுசரணையை வரவேற்றது ஜனாதிபதியே.

எநதவொரு சர்வதேச சமூகத்தினதும், நாட்டினதும், நியாய பூர்வமான, கண்ணியமான மத்தியஸ்தத்தையோ, அனுசரணையையோ தமிழ் மக்களோ, அவர்கள் சார்பில் அவர்களுக்கான விடுதலைப்போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற விடுதலைப் புலிகளோ ஒருபோதும் நிராகரித்ததில்லை.

தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாழ்வியல் தொடர்பான விட்டுக்கொடுத்தல் செய்யவே முடியாத உரிமைப்பிரச்சினைகளுக்கு, உரிய முறையில் கௌரவமாக பேசி ஜனநாயக ரீதியில் நீதியானதும், உறுதியானதுமான தீர்வொன்றினை வழங்கும் மனோதர்மமற்ற சிறிலங்காவின் பேரினவாத தலைமைகளின் கீழான அரசுகள், அதனை ராணுவரீதியில் ஆயுதமுனையில் ஒடுக்கியழிக்கும் மூலோபாயத்தை கையாளத்தொடங்கிய போதுதான் அரசியல் உரிமைகளுக்கான போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிமாணம் கொண்டது.

அதாவது தம்மீது திணிக்கப்பட்ட யுத்தத்தை, யுத்தத்தின் மூலமே தமிழ் மக்கள் எதிர்கொள்ளவேண்டிய தவிர்க்கமுடியாத சூழ்நிலைக்கு அவர்களைத் தள்ளியது சிறிலங்காவின் ஆட்சி அதிகார பீடமே தவிர வேறொன்றுமில்லை.

இப்போதும் கூட போரில் ஏற்பட்ட தோல்விகள், பின்னடைவுகள், பொருளாதார வீழ்ச்சி, படையினருக்கிடையேயான உள முரண்பாடுகள், ஆளணி இழப்பு, படையினர் படையணிகளிலிருந்து தப்பியோட்டம், அரச பயங்கரவாதத்தால் ஏற்பட்ட மனிதஉரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச கண்டனங்கள் போன்ற பன்முனைத்தாக்கங்களுக்கு முகங்கொடுக்க முடியாத நலையிலேயே அரசதரப்பினர், குறிப்பாக ஜனாதிபதி சந்தரிகா பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண நோர்வே அரசின் உதவியை நாடும் நிலைக்கு தள்ளப்பட்டார் என்பதும் பகிரங்கமான விடயமே.

ஆனால் எந்தவொரு ஏற்பாட்டாளரும் அல்லது அனுசரணையாளரும் தனது அபிலாசைகளுக்கும், எதிர்பார்ப்புக்கும் ஏற்ப சமாதான நகர்வுகளை முன்னொடுக்கவேண்டும். என்ற ஜனாதிபதி சந்திரிகாவின் உள்நோக்கங்களுக்கு நோர்வே கட்டுப்படாது செயற்பட்டமையே அவருக்கும் நோர்வேக்குமான முரண்பாட்டின் முதற்படியானது.

பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் தோல்வி கண்டதும், ரணில் ஆட்சியைப் பிடித்ததும், சில திருப்பங்களை ஏற்படுத்த மீண்டும் நோர்வே அரசின் அனுசரணையுடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி, புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்தாகி, போர்நிறுத்தமும் உறுதியானதைத் தொடர்ந்து ஏற்பட்ட சம்பவங்கள் இடைக்கால நிர்வாக தன்னாட்சி அமைப்புக்கான திட்டவரைபொன்றை புலிகள் கையளிக்கும் வரை தொடர்ந்தபோதே சந்திரிகாவினால் பொறுக்கமுடியாமற் போயிற்று.

அதன் பிரதிபலிப்பே கடந்த சிலநாட்களாக நடந்துவரும் அவரது அதிரடி நடவடிக்கைகளாகும். இந்த நடவடிக்கைகளால் பாதிப்படைந்துள்ளது சமாதான முயற்சிகளின் முன்னெடுப்பேயாகும்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி கைப்பற்றிக்கொண்டமை எந்தவகையில் பார்த்தாலும், சமாதான முயற்சிகளை ரணில் தொடரக் கூடாது என்ற அவரின் எண்ணத்தின் பாற்பட்டதேயாகும்.

இதனையே அரசியல் நோக்கர்களும், சர்வதேச ராஜதந்திரிகளும், ஏன் சிங்கள அரசியலில் உள்ள சமாதான ஆர்வலர்களும், அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் சிங்கள பொதுமக்களும் கூட இப்போது தமது கருத்துக்களில் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஜனாதிபதியும் பிரதமரும் அவரவர் பக்க நியாயங்களையும் எதிர்த்தரப்பினரின் தவறுகளையும் பகிரங்கப்படுத்தி விமர்சனக் கண்டனங்களை விளாசிக்கொண்டே சமாதானம் மற்றும் நாட்டு நிலமை குறித்து ஆராய சந்திப்பினையும் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சந்திப்பு ஒரு சம்பிரதாயபூர்வ நிழ்வாகத்தான் இருக்கும். இரு தரப்பினரதும் அதிகார மோதல் ஒரு கௌரவ பிரச்சினையாகவே மாறியுள்ளதால் தேசிய நலன் புறந்தள்ளப் பட்டுவிடும் என்பதே உண்மை.

சந்திப்பின் பின்னர் அறிக்கைகள் வரும்.

முடிவெதுவும், இணக்கமெதுவும் ஏற்படாது இச்சந்திப்பு நிறைவுறலாம், மீண்டும் சந்திப்பதென்றும் பேசுவதென்றும் கூட முடிவெடுக்கலாம். சந்திப்பின் பின்னரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டும் அறிக்கைகள் தொடரலாம்.

ஆனால் சமாதான நகர்வுகள் தொடர்பாக ஒரு ஆத்மார்த்தமான, தேசிய நலன்பற்றிய அக்கறையுடனான, ஒரு தீர்ககமான நியாயத்தின் அடிப்படையிலான, ஒரு முடிவுக்கு வருவார்களா? அதற்கு அவர்களின் பேரினவாத சிந்தனை அனுமதிக்குமா?

இதுவே இன்று விடைகாணமுடியாத வினாவாகும்.

## நாடும் நடப்பும்



# சுதந்திரமான ஆணைக்குழுவின் கீழ் அரச ஊடகங்கள் வரவேண்டும்!

(கொழும்பு)

அரசாங்க ஊடகங்கள் அனைத்தும் சுதந்திரமாக இயங்கக் கூடிய ஆணைக்குழு ஒன்றின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படவேண்டும் என்று சுதந்திர ஊடக இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகத்துறை அமைச்சு உட்பட, மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்றுக்கொண்டது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த நான்காம் திகதி ஊடகத்துறை அமைச்சு உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொறுப்பேற்றதையடுத்து எழுந்துள்ள சூழ்நிலை குறித்து, சுதந்திர ஊடக இயக்கம் ஆழமான கவனத்தில் எடுத்துள்ளது.

இந்த நிலையானது, நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கும், ஊடக சுதந்திரத்திற்கும் தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

புதிதாக ஊடக நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புக்களுக்கு நியமிக்கப்பட்டவர்கள் ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்களாவோ, ஜனாதிபதி பிரிவைச் சேர்ந்தவர்களாகவோ இருக்கின்றனர்.

இந்தநிலை ஊடகங்களின் ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு நல்லதல்ல. ஊடகநிறுவனங்களின் தலைமைப் பொறுப்புக்களில் ஆயுதப் படையைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்படுவதற்கு, சுதந்திர ஊடக இயக்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும்சரி, பொதுஜன ஐக்கிய முன்னணியும்சரி, எதிர்கட்சியாக இருக்கும்போது அரச ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்பட அனுமதிப்போம் என்று உறுதிகூறுகின்றன. ஆனால், அதிகார மாற்றம் ஏற்படும்போது இந்த வாக்குறுதிகள் மறுக்கப்பட்டு விடுகின்றன.

அத்துடன் - அரசியல் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு, அரச ஊடகங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டாம் என்றும், சுதந்திர ஊடகங்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளன.

# கேரளாவுக்கும் கொழும்புக்குமிடையே அடுத்த மாதம் முதல் கப்பல் சேவை

திருவனந்தபுரத்திற்கும் - கொழும்புக்கும் இடையில் பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கேரளாவைத் தலைமையகமாகக் கொண்ட கேரளா கிப்ஸ் அன் இங்லன்ட் நபிகேசன் கோப்பரேசனும், கொழும்பில் இயங்கும் கோல்டன் குறூசர் லைன்ஸ் என்ற கப்பல் நிறுவனமுமே இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

கேரளாவிலுள்ள கோவளத்தருகில் உள்ள விழிஞ்சம் துறைமுகத்திலிருந்து, இந்தக் கப்பல்சேவை டிசம்பர் முதல் வாரத்திலிருந்து இடம்பெறவுள்ளது.

கப்பல் சேவைக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட நிகழ்வில், கேரள மாநில போக்குவரத்து அமைச்சர் பாலகிருஸ்ண பிள்ளையும் கலந்துகொண்டிருந்தார்.

குளிரூட்டப்பட்ட வசதிகளைக் கொண்ட 500 பயணிகளை ஏற்றும் வசதிகளுடைய கப்பல், வாரத்தில் மூன்று சேவையை நடாத்தும்.

இந்தக் கப்பல் பயணம் ஆறு மணித்தியாலத்தியாலங்களைக் கொண்டதாக இருக்கும் எனவும், விமானப் பயணத்துக்காக செலவிடும் பணத்தில் அரைப் பகுதியே இக்கப்பலுக்கான கட்டணமாக இருக்குமெனவும், கேரள மாநிலப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது, கொழும்புக்கும் திருவனந்தபுரத்துக்கும் இடையிலான விமானப் போக்குவரத்துக் கட்டணமாக - இந்திய ரூபாவில் 3750 அறவிடப்படுவது குறிப்பிடத்தக்கது.

# சட்டத்தரணியை மோதிக்கொன்ற வான் சாரதிக்கு விளக்கமறியல்

சட்டத்தரணியை மோதிக்கொன்ற வாகனத்தைச் செலுத்திவந்த சாரதியை எதிரவரும் 24 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் இ.விக்னராஜா உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் பாண்டியன்தாழ்வு சந்தனமாதா கோவிலுக்கருகில் மோட்டார் சைக்கிளில் வந்த சட்டத்தரணி ஒருவரை வேகமாக வந்த ஹையஸ்வான் ஒன்று மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பந்தப்பட்டவரின் சாரதி பிரான்சிஸ் கிறிஸ்ரி டெனியன் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். இவர் பொன்னாலைப் பகுதியைச சேர்ந்தவர். வாகனம் செலுத்தும்போது மதுபோதையில் இருந்ததாக வைத்திய அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

அத்துடன் வானின் சாரதி பக்கம் மாறி வந்த காரணத்தினாலேயே இவ்விபத்து தோன்றியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய வழக்கிலிருந்து நெடுமாறன் விடுவிப்பு

விடுதலைப்புலிகளுக்குஆதரவாகப் பேசியவழக்கிலிருந்து, தமிழர்தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார்.

1992 ஆம் ஆண்டு ஜூன் 16 ஆம் திகதி, திண்டுக்கல்லுக்கு அருகிலுள்ள விண்ணம்பட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாகத் தமிழகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

கடந்த ஒரு வருடகாலமாக நடந்த இந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பு நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டதுடன், தீர்ப்பை அளித்த நீதிவான் சுந்தரம் - நெடுமாறனை இந்த வழக்கிலிருந்து விடுவிக்கத் தீர்ப்பளித்தார்.

# 150 கோடி ரூபா நஷ்டஈடு கோரி லேக்கவுஸ் நிறுவனம்மீது வழக்கு!

(கொழும்பு)

லேக்கவுஸ் நிறுவனத்திடமிருந்து, 150 கோடி ரூபா நட்டஈடு கோரி, பொ.ஐ.மு நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆளணி அமைப்பாளர் ஸ்ரீபதி துரியாராட்சியும், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மூன்று மனுக்களைத் தாக்கல்செய்துள்ளனர்.

2002 ஆம் ஆண்டு ஜூன் 3 ஆம் திகதி சிலுமின பத்திரிகை வெளியிட்ட செய்திமூலம், தனது பெயருக்கு அபகீர்த்தி ஏற்பட்டதாகவும், இதற்கு நட்டஈடாக 50 கோடி ரூபாவை லேக்ஹவுஸ் நிறுவனம் தரவேண்டுமென்றுகூறி, மங்கள சமரவீர நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

இதைவிட, 2003 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் திகதிய சிலுமின பத்திரிகையின் அரசியல் ஆய்வுப் பகுதியில், தன் புகழுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் செய்தி வெளியிடப்பட்டமைக்கு, 50 கோடி ரூபா நட்டஈடாக தரப்படவேண்டும் என்றும் மங்கள சமரவீர இன்னொரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

இதேவேளை, 2003 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 24 ஆம் திகதி சிலுமின பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியொன்று-தனது அரசியல் எதிர்காலத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தியிருப்பதாகக் கூறி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆளணித் தொகுதி அமைப்பாளர் ஸ்ரீபதி துரியாராட்சி 50 கோடி ரூபா நட்டஈடு தருமாறு கோரி இன்னொரு மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

# உயிர்கொல்லி எயிட்ஸை உலகிலிருந்து விரட்டுவோம்!

**யாழ். மாவட்டத்தில் எயிட்ஸ்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, அகதிகள் புனர்வாழ்வு நிறுவன விழிப்புணர்வுக் குழுவினரால் இந்த ஆக்கம் பிரசுரிக்கப்படுகின்றது. இந்த ஆக்கத்தைப் படித்து, நாளைய பத்திரிகையில் வெளிவரும் வினாக்களுக்கு விடையளித்து, பரிசுப் பொதிகளை வெல்லுங்கள்.**

மனித இனத்தின் ஆரோக்கியமான வாழ்வைச் சிதறடிக்கும், எயிடஸ் எனும் மாற்றமுடியாத நோய் பற்றிய விழிப்புணர்வை - யாழ்.மாவட்டத்தில் யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், கடந்த ஒருவருட காலமாக, மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றது.

இதில், இதுவரை யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த முப்பத்தைந்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்குபற்றி, விழிப்புணர்வைப் பெற்றுள்ளனர். யாழ். மாவட்டத்தில் எயிட்ஸ்நோயாளிகள் பலர் இனங்காணப்பட்டுள்ளமையும், இனிவருங்காலங்களில் இதன் பரவுதல்வேகம் அதிகரிக்கும் என்பதையும், சுகாதாரத் திணைக்களத்தின் தகவல்கள் அறிவுறுத்துகின்றன.

எனவே, யாழ்.மாவட்டம் மட்டுமன்றி, ஒட்டுமொத்த மக்களுமே எயிட்ஸ் பற்றிய சரியான அறிவைப் பெறுவதன்மூலம், தமது நாளாந்த வாழ்க்கையைப் பாதுகாப்பானதாக்கி, இதன் தா்க்கத்திலிருந்து தம்மைக் காத்துக்கொள்ளலாம் என்பது உண்மையே.

கொடிய அரக்கன் எயிட்ஸ் எனும் நோயிலிருந்து எம்மையும், எமது சமுதாயத்தையும் காப்பாற்றி, ஆரோக்கியமான வாழ்வைக் கட்டியெழுப்புவோம்.

இற்றைக்கு உலகில் 42 மில்லியனுக்கு மேற்பட்ட மக்களுக்குத் தொற்றி, அவர்களை மரணத்தின் வாயிலை நோக்கி அழைத்துச் செலலும் எயிட்ஸ் எனும் கொடிய உயிர்கொல்லிநோய் - 1981 ஆம் ஆண்டு அமெரிக்க விமானச் சிப்பந்தி ஒருவரில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவிலிருந்தே உற்பத்தியாகியிருக்கவேண்டும் எனக் கருதப்படும் எயிட்ஸ்நோய் -இன்று உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதனால், டிசம்பர் 1 - உலக எயிட்ஸ் விழிப்புணர்வு நாளாக நினைவுகூரப்படுகின்றது.

### எயிட்ஸும் அதன் காரணியும்

எயிட்ஸ் (AIDS) எனப்படுவது 'மனிதனின் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைவதால், பெறப்படும் பல்வேறு நோய்களின் கூட்டு' எனக் குறிப்பிடலாம். இதன் ஆங்கிலப்பதம்

A - Acquired
I - Immuno
D - Deficiency
S - Syndrome

எயிட்ஸ்நோய்க்குரிய காரணி- நுண்ணங்கிகளில் ஒன்றான ஒரு வகை வைரசு ஆகும். இதனை HIV என அழைப்பர். HIV என்பது 'மனித நிா்ப்பீடனசக்தியைக் குறைக்கும் வைரசு' எனப்படும்.

H - Human
I - Immune deficiency
V - Virus

HIV ஆனது, மனிதனது குருதித் தொகுதியை அடைந்து, அங்கு நிணநீா்க்குழியங்களிலுள்ள '$T_4$' வகையான கலங்களை அழிப்பதோடு, தானும் பெருக்கமடைகின்றது.

HIV தொற்று ஏற்பட்ட நபரை வெளிப்பார்வையில் கண்டுபிடித்துவிடமுடியாது. HIV தொற்று ஏற்பட்டு, 8-12 வருடங்களின் பின்பே எயிட்ஸ் நோய்க்கான அறிகுறிகள் வெளித்தெரியத்தொடங்கும். அதுவரையில் அவா் காவியாக (HIV Positive) இருப்பார்.

HIV தொற்றுக்குள்ளானவருடைய நோய் எதிர்ப்புசக்தி, மிக இழிவான நிலையை அடையும்போது, (80-85% ஆல் குறையும்போது) எயிட்ஸ்நோய் உண்டாகும். அப்போது பின்வரும் அறிகுறிகளில் கணிசமானவை தென்படும்.

- **காரணமின்றிய கடும் சோர்வு.**
- **சுரப்பிகள் வீங்குதல் (கழுத்து, அக்குள் பகுதிகள்)**
- **காரணமின்றிய தொடர் வயிற்றோட்டம் (ஒருகிழமைக்குமேலாக நீடிக்கும்)**
- **தொடர்ச்சியான காய்ச்சலும், இரவில் கடுமையாக வியர்த்தலும்.**
- **சடுதியான உடல் நிறைக்குறைவு (மாதாந்தம் 10%)**
- **பசியின்மை.**
- **தலைமுடி அசாதாரணமாக உதிர்தல்.**
- **தோல் வியாதிகள்.**
- **வாயைச்சூழப் புண்கள், இளஞ் சிவப்பு கொப்புளங்கள்.**

### எயிட்ஸ் தொற்றுதல்

HIV எனும் கிருமி- எமது உடலின் குருதித் தொகுதியைச் சென்றடைந்து பெருக்கத்திற்கு உள்ளாகின்றது. இவ்வாறு ஒரு மனிதனுக்கு HIV தொற்றும் வழிமுறைகளைப் பிரதானமாக நான்காக வகைப்படுத்தலாம்.

(1) HIV தொற்றுள்ளவருடனான பாதுகாப்பற்ற பாலியல் உறவுகள்.
(2) HIV பரிசோதிக்கப்படாத குருதி மாற்றீடு.
(3) தொற்று நீக்கப்படாத மருத்துவ உபகரணப்பாவனை.
(4) HIV தொற்றுள்ள தாயிடமிருந்து குழந்தைக்கு.

இந்தப் பிரதான வழிகளின்மூலம், HIV கிருமிகள் இன்னொருவரை அடைந்து, மற்றையவருக்குத் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

### எயிட்ஸிலிருந்து பாதுகாப்பு

மேற்கூறிய நான்கு வழிகளையும் தடைசெய்வதன்மூலம், HIV கிருமி தொற்றுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஒருவனுக்கு ஒருத்தி எனும் கட்டுப்பாட்டுடன், சீரான குடும்ப உறவை பேணுதல். தவறும் பட்சத்தில் ஆண்-பெண் உறைகளை (Condom) உரியமுறையில் அணிந்து பாதுகாப்பான பாலுறவில் ஈடுபடல்.

எமக்கோ, எமது உறவினருக்கோ குருதி ஏற்றப்படும் சந்தர்ப்பத்தில், ஏற்றப்படும் குருதி - HIV பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதா என்பதை உறுதிசெய்தல்.

மருந்தேற்றுவதற்குப் புதிய ஊசிகளை அல்லது உரியமுறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட ஊசிகளைப் பயன்படுத்த அனுமதித்தல்.

தொற்றுள்ள தாய் -கர்ப்பந்தரிக்காதிருத்தல் எனும் வழிமுறைகளைக் கைக்கொள்ளல் வேண்டும்.

### சாதாரண வழிகளில் தொற்றுவதில்லை

HIV ஆனது, மேற்கூறிய தொற்றும் வழிகளைத் தவிர, சாதாரணமான தொடர்புகளால் தொற்றுவதில்லை.

- சாதாரணமாக முத்தமிடுதல்.
- கை குலுக்குதல், தொடுதல், கட்டியணைத்தல்.
- சாப்பிடும், குடிக்கும் பாத்திரங்களைப் பாவித்தல்.
- நுளம்பு மற்றும் பூச்சிக் கடிகளினால்.
- நீச்சல்தடாகம், குளம், ஆறு, கடல் போன்றவற்றில் குளித்தல்.
- மலசலகூடங்களைப் பாவித்தல்.
- இருமுதல், தும்முதல்மூலம்.
- ஆடைகளை மாற்றிப் பாவித்தல்.
- ஒரே அலுவலகத்தில் பணியாற்றுதல்.
- நண்பர்களாக இருத்தல் போன்றவை, தொற்றாத வழிமுறைகளாகும்

### HIV தொற்றை உறுதி செய்தல்

HIV தொற்றுடையவர் தாமாக முன்வந்து, HIV இற்கான தொற்று உண்டா எனப் பரிசோதிக்க, தனது குருதியை வைத்தியசாலையில் வழங்குதல் வேண்டும்.

இதற்காகப் போதனா வைத்தியசாலையிலுள்ள பாலியல் நோய்த் தடுப்பு பிரிவினர் (STD Clinic) - அக்குருதியைப் பரிசோதித்து, HIV தொற்று ஏற்பட்டுள்ளதா? இல்லையா? எனச் சம்பந்தப்பட்டவருக்கு மட்டும் இரகசியமாக அறிவிப்பார்கள்.

பின்னர் அவர்களுக்கு தொற்று இனங்காணப்படுமிடத்து, மருத்துவ ஆலோசனைகளும், உளவளத்துணையும் பெற்றுக்கொடுக்கப்படும்.

### நோயாளர் பராமரிப்பு

HIV தொற்றுக்குள்ளானவரை, முற்றாகக் குணப்படுத்த (கிருமியை அழிக்க) இதுவரை எந்த மருந்தும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, நாம் தொற்றைப் பெறாது, விழிப்புணர்வோடு இருப்பதே அவசியமானது.

எயிட்ஸ் நோயாளர் ஒருவர்- எமது சமூகத்தில் இனங்காணப்பட்டால், அவரை நிச்சயம் பராமரிக்க வேண்டும்.

- தொற்றுள்ளவரது உணர்வுகளை மதித்தல்.
- அவரை ஏற்றுக்கொள்ளுதல்.
- எதிர்காலத்தைச் சரியான பாதையில் திட்டமிட்டுக் கொடுத்தல்.
- மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்தல்
- சாதாரண நோயாளியைப்போல் கவனமாகப் பழகுதல்.
- அவரது தேவைகளை நிறைவேற்றுதல்.
- உளத்தாக்கத்திலிருந்து விடுபட வழிசமைத்தல்.
- மனத்தில் நம்பிக்கை ஊட்டுதல் என்பனவற்றினூடாக அவரைப் பராமரித்தல் - அவருக்கும், அவர் சார்ந்த சமூகத்திற்கும் நன்மை அளிப்பதாகும்.

**"எனவே எயிட்ஸைப் பற்றித் தெரிந்துகொண்டு, ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவோமாக"**

# தென்னிலங்கை அரசியல் நெருக்கடி குறித்து நாம் குழப்பமடைய வேண்டிய தேவையில்லை

## மட்டு - அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ்

தற்போது ஏற்பட்டுள்ள அர சியல் நெருக்கடி - ஜனாதிபதி சந்திரிகாவின் கட்சியினருக்கும், ரணில் அரசாங்கத்தினருக்குமே. இதனால் விடுதலைப்புலிகளோ, தமிழ் மக்களோ குழப்பமடையத் தேவையில்லை என பசுமை நூல் வெளியீட்டு விழாவில், மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கரடியனாறு மகா வித்தியாலயத்தில் பசுமை ஆண்டு மலர் வெளியீட்டுவிழாவில், பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும்போதே இவ்வாறு கூறினார். மட்டு - அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு பொறுப்பாளர் நிசாம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சிறப்புத் தளபதி தொடர்ந்து பேசுகையில் -

தற்போது தென்னிலங்கையில் அரசியல் கொந்தளிப்புக்கள் ஏற்பட்டுள்ளது. அதை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகிறோம். இதனையிட்டு தமிழ்மக்கள் குழம்பத்தேவையில்லை.

அங்கு ஏற்படும் நிலைமைகளுக்கு ஏற்பவே எமது அடுத்த கட்ட நடவடிக்கை ஏற்படும் எனத் தெரிவித்தார். பசுமை இதழிலுள்ள விடயங்களை அரசாங்க ஊழியர்கள் மற்றும் பொதுமக்களிடையே தெரியப்படுத்தவேண்டும் என்றார்.


**உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு, யுனிசெப் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் முன்னெடுக்கும் மாபெரும் பரிசுப் போட்டிகள்**

# சுவரொட்டி ஓவியப்போட்டி

தலைப்புக்கள் :-

- **எயிட்ஸைத் தடுப்போம்.**
- **எயிட்ஸினால் அழியும் மானிடம்.**
- **எயிட்ஸும் எதிர்காலமும்.**

## இப்போட்டிகள் யாழ். மாவட்டத்தில் 3 இடங்களில் நடைபெறும்

யாழ்ப்பாணம் - வேம்படி மகளிர் கல்லூரி (வலிகாமம் உட்பட).
சாவகச்சேரி - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
நெல்லியடி - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

காலம்:- 23.11.2003
நேரம்:- 10.00 -11.00 மணிவரை.

## விதிமுறைகள்

- யாழ். மாவட்டத்திலுள்ள 14-25 வயதுவரையுள்ள எவரும் பங்குபற்றலாம்.
- போட்டியாளர்கள் தங்கள் பெயர், வயது, முகவரி, பால், தொழில், பிரதேச செயலர் பிரிவு, கல்வி வலயப் பிரிவு போன்ற விபரங்கள் அடங்கிய படிவத்தினை - 20.11.2003 வியாழக்கிழமைக்கு முன்பாக, எமக்குக் கிடைக்குமாறு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.
- பாடசாலை மாணவராயின், மேலே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களுடன்- தங்கள் பாடசாலையின் பெயர், கல்வி கற்கும் தரம் என்பவற்றையும் குறிப்பிடவேண்டும்.
- விபரங்களை எமக்கு அனுப்பியவர்கள் மட்டும் -தரப்பட்டுள்ள இடங்களில், குறிப்பிட்ட தினத்தில், தங்களுக்கு வசதியான பரீட்சை மையங்களில் பங்குபற்றவும்.
- கடித உறையின் இடது மேல் பக்கத்தில் 'எயிட்ஸ் தினம்' எனக் குறிப்பிடவும்.

## கட்டுரையூடான வினாவிடைப் போட்டி

13.11.2003 வியாழக்கிழமை - இன்று வெளியாகியிருக்கும் 'உயிர் கொல்லி எயிட்ஸை' - உலகிலிருந்து விரட்டுவோம் எனும் கட்டுரையிலிருந்து, 14.11.2003 வெள்ளிக்கிழமை நாளைய பத்திரிகையில் 15 வினாக்கள் வெளியிடப்படும். அவற்றிற்கான விடைகளை இக் கட்டுரையிலிருந்து தெரிவுசெய்து எழுதி, விடைத்தாளை 20.11.2003 வியாழக்கிழமைக்கு முன்பாக, எமது தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

- இந்தப் போட்டியில்- யாழ்.மாவட்டத்திலுள்ள 14 வயதிலிருந்து 25 வயதுக்குட்பட்ட அனைவரும் பங்குகொள்ளலாம்.
- போட்டியாளர்கள் தங்கள் பெயர், வயது, முகவரி, பால், தொழில், பிரதேச செயலர்பிரிவு, கல்விவலயப்பிரிவு போன்ற விபரங்கள் ஆகியவற்றை, உங்கள் விடைத்தாளுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
- பாடசாலை மாணவர்களாயின் -மேற்கூறப்பட்ட விடயங்களுடன், பாடசாலையின் பெயர், தரம் என்பவற்றை இணைக்கவேண்டும்.
- கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "எயிட்ஸ் தினம்" எனக் குறிப்பிடவும்.

**உங்கள் விடைகளோ / ஓவியப் போட்டிக்கான விபரங்களோ வந்து சேரவேண்டிய முகவரி -**

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்**
**106, 4 ஆம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**குறிப்பு - T.R.R.O, Unicef நிறுவனத்தில் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ பணிபுரிபவர்கள் இந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளமுடியாது.**

(சி/1792)

இத்தாலிய இராணுவ பொலிஸ் நிலையம் மீது

# ஈராக்கின் தென்பகுதி நகரில் நேற்று தற்கொலை தாக்குதல்!

## 14 பொலிஸார் உட்பட 22 பேர் உயிரிழந்தனர்!



(பக்தாத்)

ஈராக்கின் தென்பகுதி நகரனா நசிறியாவில் அமைந்துள்ள இத்தாலிய இராணுவ பொலிஸ் நிலையம் ஒன்று நேற்று தாக்குதலுக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

வெடிமருந்து நிரப்பப்பட்ட வாகனம் ஒன்றின் மூலம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், கட்டடம் பலத்த அதிர்வின் பின் தீப்பற்றிக் கொண்டாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடிபாடுகளுக்கிடையில் பலர் சிக்கிக் கொண்டுள்ளதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் இத்தாலியப் பொலிஸாரும் ஈராக்கியர்களும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

போரின் பின்னான ஈராக்கின் கட்டுமானப் பணிகளுக்கென இத்தாலிய அரசு 2000 படையினரை அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே, பக்தாத்தில் நடத்தப்பட்ட பிறிதொரு 'தாக்குதல் சம்பவத்தில் அமெரிக்க சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக அறியவருகிறது.

# ஈராக்கில் தற்காலிக அரசு; அமெரிக்கா ஆலோசிக்கிறது!

(வோஷிங்ரன்)

ஈராக்கில் விரைவில் தற்காலிக அரசொன்றை நிறுவ உள்ளதாகவும், அதன்மூலம் அமெரிக்காவின் அதிகாரத்தின் கீழ் ஈராக் அமைந்துள்ளதென்ற கருத்தை மாற்றியமைக்க முடிவதுடன், அரசியல் அமைப்பொன்றை உருவாக்க வழிவகுக்கும் எனவும் ஈராக்கை நிர்வகிப்பதற்கென அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட 25 உறுப்பினர்களைக் கொண்ட அதிகார சபையின் தலைவர் ஜலால் தலபானி ரொய்ட்டருக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அமெரிக்க அரச ஈராக்கின் வளங்களைக் கொள்ளையிட முயற்சிக்கின்றது எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு தவறானது. ஈராக்கின் புனரமைப்புக்கென அமெரிக்கா 18 பில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

ஈராக்கின் முன்னைய அரசியல் சட்டங்களை மக்களின் கருத்துக்கணிப்பொன்றுக்குச் சமர்ப்பித்த பின்னரே ஈராக்கியர்களுக்கான இறைமையுள்ள அரசொன்றை உருவாக்க முடியும்.

ஈராக்கின் தலைகர் பக்தாத்திலும் ஏனைய பகுதிகளிலும் அமெரிக்கப் படையினருக்கெதிராக நடத்தப்படும் தாக்குதல்களும் உயிரிழப்புக்களும் விரைவான தீர்வொன்றை ஈராக்கியர்களுக்கு வழங்கவேண்டும் என்ற எண்ணத்தை அமெரிக்க அரசுக்கு உருவாக்கியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

## அல்கொய்டாவுடன் தொடர்புடைய தீவிரவாதிகள் 20 பேர் கைதாம்!

### ஈராக்கின் அமெரிக்க கூட்டுப்படை அதிகாரி

'அல்கெய்டா' வுடன் தொடர்புள்ள முஸ்லிம் தீவிரவாதிகள் 20க்கு மேற்பட்டோர், ஈராக்கில் கைதுசெய்யப்பட்டதாக அமெரிக்க கூட்டுப் படை அதிகாரி தெரிவித்தார்.

தொடர்ந்து விசாரணைகள் மேற்கொண்டதன் மூலம் கைது செய்யப்பட்டவர்கள் அல்கெய்டா அங்கத்தவர்கள் என்பது உறுதியாக அறியப்பட்டுவிட்டதாக கூட்டுப்படை அதிகாரியான 'ரிக்காடோ சன்செஷ்' தெரிவித்தார்.

அமெரிக்கப் படைக்கெதிராக புனிதப் போர் ஒன்றை நடத்துவதற்கு ஈராக்கிற்குள் ஈரான் சிரியா ஆகிய நாடுகளின் எல்லைகளுக்கூடாக ஈரானுக்குள் நுழைதாகவும், ஈராக்கின் குடிவரவு அதிகாரிகள் எல்லைகளில் காவல் கடமைகளை தீவிரப்படுத்தி உள்ளதாகவும் தெரிவித்தார்.

## பலஸ்தீனத்தில் வாழ்வதற்கு இஸ்ரேலியர்களுக்கும் உரிமை!

பலஸ்தீன தனிநாட்டில் இஸ்ரேலியர்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கு உரிமை உண்டு என பலஸ்தீனிய அதிபர் "யசீர் அரபாத்" நேற்றுத் தெரிவித்தார்.

பலஸ்தீனியர்கள் வாழும் பகுதிகளில் இஸ்ரேலியர்களும் பாதுகாப்புடன் வாழ்வதற்கு உரிமைகள் மறுக்கப்படமாட்டதென அதிபர் அரபாத் தெரிவித்தார்.

மனித அழிவுகளைத் தரும் போரில் இருந்து மீண்டு பாதுகாப்பாக வாழ்வதற்குரிய நேரம் வந்து விட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள

## சார்க் உச்சி மாநாட்டிற்கு இந்தியப் பிரதமருக்கு அழைப்பு

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் வரும் ஜனவரி மாதம் நடைபெற ஏற்பாடாகியுள்ள தெற்காசிய நாடுகளின் உச்சிமாநாட்டில் பங்குகொள்வதற்கு இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை அந்த நாடு அழைத்துள்ளது.

இந்தியப் பிரதமரை சிறந்த முறையில் வரவேற்பதற்குத் தயாராகவுள்ளதாக பாகிஸ்தான் தகவல் அமைச்சர் செய்க் ரசீட் அஹமட் தெரிவித்தார்.

பாகிஸ்தானிய மக்கள் இந்தியப் பிரதமர் மீது அதிக நம்பிக்கை வைத்துள்ளதாகவும் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை இந்தியப் பிரதமரால் மாத்திரமே தீர்த்துவைக்க முடியும் எனவும் ரசீட் நம்பிக்கை தெரிவித்தார்.

## உலக நோக்கு

கிழக்குத் தீமோருடனான

## கடல் எல்லை பிணக்கைத் தீர்க்க அவுஸ்திரேலிய அரசு இணக்கம்!

அவுஸ்திரேலியாவிற்கும், கிழக்குதீமோருக்கும் இடையே அமைந்துள்ள தீமோர் கடல் எல்லை தொடர்பான பிரச்சினைகளை விவாதிப்பதற்கு டார்வினில் கலந்துரையாட ஏற்பாடாகி உள்ளது.

எரிவாயு, எண்ணை வளம் நிறைந்த இந்தக் கடல் பகுதிக்கு இரு நாடுகளும் உரிமை கொண்டாடி வருகின்றன.

இரு நாடுகளுக்கும் இடைப்பட்ட இந்தக் கடலின் இடைத்தூரம் 230 கடல் மைல்களாகும். ஆனால், சர்வதேச கடல் சார்ந்த சட்டப்படி 200 கடல் மைல் தூரத்தை வைத்திருப்பதற்கு கடலின் இரு பக்கத்து நாடுகளுக்கும் உரிமை உண்டு.

ஆனால், 400 கடல் மைல்களை குறைவாக கொண்டிருக்கும் கடலை இரு பகுதியினருமே சமமாக பகிர்ந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான முடிவு ஒன்றைக் காண்பதற்கே தீமோரின் நகரான டார்வினில் இருதரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளனர்.

உலகில் உள்ள வறிய நாடுகளில் கிழக்கு தீமோரும் ஒன்றாகும்.

ஆரம்பத்தில் போர்த்துகல்லின் குடியேற்ற நாடாக இருந்து பின் இந்தோனேஷியாவின் ஆட்சியின் கீழ் இருந்த கிழக்குத் தீமோர் கடந்த மே மாதம் சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது.



12 கப்பல்களில் ஏற்றிவரப்பட்ட அனுசக்திக்குத் தேவையான மூலப்பொருள்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஒருவரை ஜேர்மனி பொலிஸார் கைதுசெய்கின்றனர்.

## ஊர்சுற்றி எழுதுவது

தேர்தல் வருமா? சமாதானப் பேச்சு தொடங்குமா? ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலுள்ள முறுகல் நிலை நீங்குமா, தொடருமா?

இந்தக் கேள்விகளை நண்பர் கேட்டார். இவைதான் இன்று நாட்டில் பொதுவாக கேட்கப்படும் கேள்விகள்.

நாடாளுமன்றத்தை கலைத்து புதிய ஆட்சியை பதவியில் அமர்த்துவதற்கு சந்திரிகா அம்மையார் தயாராக இல்லை.

தேசிய அரசு என்ற போர்வையில் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் ஆதரவாக உள்ள சில கட்சிகளை அல்லது உறுப்பினர்களையாவது வளைத்துப் பிடிக்கலாம் என்ற முயற்சி நடைபெறுகிறது.

இந்த முயற்சிக்குப் புத்த பிக்குகளின் ஆசியும், ஆதரவையும் கேட்கும் வேலையும் தொடர்கிறது.

அமைச்சுக்களை பொறுப்பேற்றிருக்கும் ஜனாதிபதியே சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடரட்டும். நாங்கள் ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறோம் என்று பிரதமர் ரணில் சொல்லியிருந்தார் அல்லவா?

இதுபற்றி ஜனாதிபதியின் ஊடகவியலாளர் பேசுகையில், முதலில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்த ஜனாதிபதிக்கு சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து, நடத்துவதொன்றும் கஷ்டமான வேலையல்ல என்று தெரிவித்திருந்தார்.

அது சரி! ஜனாதிபதி சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்த முன்வருகின்றார் என்று வைத்துக் கொண்டால், இதை முதலில் சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணையாளர்களான நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் மற்றும் நோர்வே அரசிடம் தெரிவித்திருக்க வேண்டும்.

பின்னர் இதை நோர்வே விசேட சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்திருக்க வேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் எந்த அடிப்படையில் தொடரும்?

விடுதலைப்புலிகள் பல நாடுகளுக்குச் சென்று, சட்ட நிபுணர்கள், அரசியல் நிபுணர்களை எல்லாம் சந்தித்து ஆராய்ந்து தயாரித்து அரசிடம் கையளித்த இடைக்கால தன்னாதிக்க சபை அமைக்கும் வரைபுக்கு முதலில் என்ன முடிவென்று தானே விடுதலைப் புலிகள் கேட்பார்கள்.

நிலையான, நிரந்தரமான அரசுடன்தான் சமாதானத்தைப் பற்றிப் பேசி உடன்பாடு கண்டால் பயணிக்கும். திருசங்கு நிலையில் இருக்கும் அரசுடன், செய்துகொள்ளும் சமாதான ஒப்பந்தம் எவ்வளவு காலத்திற்கு தாக்குப்பிடிக்கும்.

இதனால்தான் சமாதான பேச்சுக்கு முதல் போரினால் பாதிக்கப்பட்டு அல்லல்படும் மக்களுக்கும் இடம்பெயர்ந்து சென்று மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு வந்தும், தமது வாழ்க்கையை தொடரமுடியாதிருக்கும் மக்களுக்கும், புனரமைப்பு, புனர்வாழ்வுக்குச் சரியான முறையில் உலக நாடுகள் வழங்கும் உதவிகளை வழங்குவதற்கும், மற்றும் அந்த மக்களின் நலன்களைக் கவனிப்பதற்கும், இடைக்கால தன்னாதிக்க அதிகார சபை வேண்டுமென்று விடுதலைப்புலிகள் அதற்கான வரைபை சமர்ப்பித்துள்ளனர்.

மீண்டும் பேச்சை தொடங்க வேண்டுமானால் முதலில் இதுபற்றி முடிவுசெய்யலாம் என்று தானே கேட்பார்கள். சொல்ஹெய்மும் தன்னாதிக்க சபைக்கான வரைபை தயாரித்த சமயத்தில் கலந்து பேசியவர்தானே.

ஜனாதிபதி பேச்சுவார்த்தை என்று சொன்னால், சொல்ஹெய்ம் இதுபற்றி சொல்லத்தானே செய்வார்?

இவர் இதைச் சொன்னால் அவரும் விடுதலைப் புலிகளின் ஆள்தான் என்றும், அவரும் நாட்டைப் பிடிக்கப் பார்க்கிறார் என்றும் ஜனாதிபதி சொல்லமாட்டாரா?

இப்போது நாட்டில் தோன்றியுள்ள அரசியல் முட்டுக்கட்டைக்கோ, நெருக்கடிக்கோ உடன் தீர்வு கிடைக்காதா என்று கேட்டார் நண்பர்.

பலாக்காய்ப் பால் மாதிரி இழுபட்டுக் கொண்டு தான் இருக்கும் என்றார் எதிர்வீட்டுக்காரர்.

பிரச்சினை இழுபட்டால் போர் தொடங்கி விடாதா என்றார் நண்பர்.

அரச படைகளுடன் எந்தவித முறுகலும் முரணும் ஏற்படாதபடி நடந்துகொள்ளவேண்டும் என்றும், மாவீரர் நாள் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்யும் போதும் கலந்து கொள்ளும் போதும் மிக அவதானமாக இருக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருப்பதாக பேசிக்கொள்கிறார்கள். அதாவது, யாரும் சொறிவதற்கு இடம்கொடுத்துவிடக்கூடாது! போதுமா?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜனாதிபதியின் அதிகாரங்களில் சில பிரதமருக்கு வழங்கப்பட வேண்டும்!

## பிரச்சினை தீர அதுவே வழி எனச் சம்பந்தன் தெரிவிப்பு

(தொடர்ச்சி)

சமாதானத்தை முன்னெடுக்கும் வகையில் பிரதமரிடம் ஜனாதிபதி சில அதிகாரங்களை வழங்கினால் பிரச்சினைகள் வளராமலிருக்குமென தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தெரிவித்தார்.

நேற்று பி.பி.ஸியின் தமிழோசைக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஜனாதிபதி அதிகாரங்களைத் தன்வசம் வைத்திருப்பதால் பயனேதுமில்லை. பிரச்சினைகள் வளரவே அது வழிவகுக்கும். அதிகாரங்களைப் பிரதமரிடம் வழங்கி சமாதான முயற்சிகளை முன்னெடுக்கச் செய்வாரானால் அது நாட்டிற்கு நன்மையளிப்பதாக அமையும்.

குறிப்பாக, பாதுகாப்பு அமைச்சு சம்பந்தமான விடயங்களை அரசு கையாளாளம் என்கின்ற நிலைக்கு அவர் வருதல் வேண்டும்.

ஜனாதிபதி சமாதான முயற்சிகளில் இறங்கினாலும் விடுதலைப்புலிகள் அதனை ஏற்றுக்கொள்வார்களா என்கின்ற சந்தேகமே எழுகின்றது. ஏனெனில் சமாதான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட காலம்முதலே ஜனாதிபதி அதற்கு இடையூறான வகையில் செயற்பட்டு வந்துள்ளார். அவர் கபடநோக்கத்துடன்தான் அதில் ஈடுபடுவார் என தமிழர் மத்தியில் ஒரு எண்ணப்பாடு உருவாகியுள்ளது என்றார்.

### நாரஞ்சந்தி

கண்டபடி சந்தர்ப்பத்திற்கும், ஆட்களுக்கும், தமது சுய அபிலாசைகளுக்கும் ஏற்ப அறிக்கைகளை விடுவதும், பின்னர் அது சிக்கலானதும் அதனை மறுத்து மீண்டும் புதிய அறிக்கை விடுவதும், முதல் அறிக்கைக்காக யார் யாரோ மீது குற்றஞ்சுமத்துவதும் அரசியல்வாதிகளின் சுபாவம்தான் - என்றார் ஆறுமுகத்தார்.

நீங்கள் யாரைக் குறிப்பிடுகிறீர்கள்? என்றார் மணியம்.

அதுதான் அவர் அரசியல்வாதிகள் என்று பன்மையில் குறிப்பிட்டதிலிருந்தே புரிந்துகொள்ளலாமே! என விளக்கினார் செல்லையர்.

'சந்திரிகா முதல் சங்கரியார் வரை' என மேலும் விளக்கினார் அவர். உடனே...

அவரவர் யார் யாரையோ ஏதேதோ அறிக்கைகளுக்காக நினைத்து சிரித்துக் கொண்டார்கள்.

அறிக்கை விடுவதில் உள்ள ஆபத்தே இதுதான் பாருங்கோ. அறிக்கை விடுவதில் அவசரத்தையோ தனது எதிரிகள் மீதான ஆத்திரத்தையோ காட்டினால் பின்னர் மறுக்கவேண்டிவரும் அல்லது மன்னிப்புக் கேட்கவேண்டி வரும் - என்றார் முகத்தார்.

'இப்பிடியெல்லாம் செய்யிற வல்லமை இருந்தாத்தான் அரசியல்வாதியாக இருக்கலாம்' - இது செல்லையர்.

'இது கிடக்கட்டும்... ரணிலும் சந்திரிகாவும் நேற்றுச் சந்திச்சினமாம் என்ன பேசியிருப்பினம' - என்று கேட்டார் மணியம்.

'நிச்சயமா எங்களுக்கு சாதகமாகவும், அவர்கள் இரண்டுபேருக்கும் பாதகமாகவும் எதையும் பேசியிருக்கமாட்டினம் என்ற முகத்தாரை நோக்கி...

-நீ அரசியல்வாதிகளை விடவும் திறமையாக அறிக்கை விடுகிறாய்' என்று கூறிவிட்டு பலமாகச் சிரித்தார் மணியத்தார்.

தெருவாசி

# யாழ். வலய கல்வி அலுவலகத்தில் கல்வி மேம்பாட்டுப் பேரவை

யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்வி மேம்பாட் டுப் பேரவை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு நாளை மறுதினம் காலை 10 மணியளவில் வலயக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும். வலயக்கல்வி மேம்பாட்டுப் பேரவை அறிமுகம் செய்து கொள்ளப்படுவதுடன், வலயக் மேம்பாட்டுப் பேரவையினால் 2004 இல் முன்னெடுக்கப்படவுள்ள கல்வி மேம்பாடுகள் தொடர்பான விளக்கங்களும் அளிக்கப்படவுள்ளன என யாழ். கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# பேரியல் அஷ்ரப்புடன் சந்திரிகா நேற்றுப் பேச்சு

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஷ்ரப்பை சந்தித்து ஜனாதிபதி சந்திரிகா கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் தற்சமயம் எழுந்துள்ள அரசியல் நெருக்கடிகள், தேசிய அரசாங்கக் கொள்கை சமாதான முன்னெடுப்பில் முஸ்லிம்களின் மூன்றாம் தரப்பு பிரதிநிதித்துவம் தொடர்பாகவும் பேசப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும் மேலதிக விபரங்கள் எதுவும் வெளிவரவில்லை.

அதேவேளை ஜனாதிபதி விரைவில் ஏனைய கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஹெலிகிசன்...

சந்திப்பில் ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பில் - ஐக்கிய தேசிய முன்னணி அரசிடமிருந்து தன்னால் மூன்று அமைச்சுக்கள் ஏன் பெறப்பட்டது எனவும், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் நோர்வேக்குத் திருப்பியழைக்கப்பட வேண்டுமெனதான் ஏன் கேட்டுக் கொண்டது தொடர்பாகவும், நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்களிடம் ஜனாதிபதி விளக்கமளித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நோர்வேயின் சமாதான ஏற்பாட்டாளர்கள் முன்னர் இலங்கைக்கு வருகை தந்த நேரங்களில் அவர்களுடனான சந்திப்புக்களை ஜனாதிபதி தவிர்த்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஐக்கிய தேசிய...

கொடுத்து வாங்கவேண்டிய தேவை இல்லையெனவும், தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 கோடி முதல் ஆறு கோடிவரை கொடுத்து தம்பக்கம் இழுக்க சுதந்திரக்கட்சியினர் திட்டமிடுகின்றனர் என அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க தெரிவித்த கருத்திற்கு மறுப்புத் தெரிவித்தே மேவின்சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (01)

### அமைச்சர்...

டம் பேசியபோது, சோதனைச் சாவடியில் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் சோதனைகள் மக்களுக்கு இடையூறாக அமையக் கூடாதென அமைச்சர் ஜயலத் அவர்களிடம் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு ஜனாதிபதிக்கு ஒத்துழையுங்கள்

## கும்றுகமுவே வஜிர தேரோ கோரிக்கை

தேசிய அரசு அமைக்க ஜனாதிபதி விடுத்த கோரிக்கைக்கு, அனைவரும் ஒத்துழைப்பு வழங்குதல் வேண்டும் என, அகில இலங்கை பிரித்சங்க விதான அமைப்பின் தலைவர் கும்றுகமுவே வஜிரதேரோ கேட்டுள்ளார்.

ஜனாதிபதியின் நடவடிக்கைகள் குறித்து அந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நாட்டின் நன்மை கருதி அனைத்துத் தலைவர்களும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும். ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனை அனைத்துத் தரப்பினருக்கும் பொருத்தமுடையதாக இருக்கும்.

அந்த யோசனைகளுக்கு அனைவரும் ஒத்துப்போக வேண்டும். ஜனாதிபதி கோரியுள்ள தேசிய அரசு அமைக்கும் திட்டத்திற்கு, ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம், பல நன்மைகள் உருவாகும். இதனை உணராது, அதனை எதிர்ப்பது பெரும் தவறாக அமையும். பிரதம நீதியரசர் மீதான வழக்கு விசாரணையை, ஆளும கட்சியினர் வாபஸ் பெறாதுவிட்டால், அதனை எதிர்த்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை எமது சங்கம் நடத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### நிவாரண வழங்கற் கட்டளைகளை உடன்பெறக் கோரிக்கை

பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு செப்ரம்பர் மாதத்திற்கான உலர்உணவு நிவாரத்தினை தாமதியாது வழங்க வேண்டியுள்ளது. எனவே பிரதேச செயலருக்கு வழங்கிய யூலை மாதத்திற்கான விநியோகத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரதியை யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியில் சமர்ப்பித்து செப்ரம்பர் மாதத்திற்கான உலர் உணவு நிவாரணத்திற்குரிய பொருட்களிற்கான வழங்கற்கட்டளைகளை உடன் பெற்றுக் கொள்ளுமாறு சகல பல நோககுக் கூட்டுறவுச் சங்கங்களினையும் செயலக புனர்வாழ்வுப்பகுதி திட்டப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### நாடாளுமன்றத்தை...

நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டும் என்ற கருத்தை எவரும் முன்வைக்கவில்லை. ஆனால் நாடாளுமன்றத்தைச் சேர்ந்த அதிக அங்கத்தவர்கள் கையொப்பமிட்ட கடிதம் ஒன்று எனக்கு கிடைத்துள்ளது.

அக் கடிதத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதன் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டதே அன்றி 19 ஆம் திகதிக்கு முன் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரப்படவில்லை.

இது எந்தவகையிலும் அரசியல் யாப்பை மீறுவதாக அமையாது.

எனினும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை நாடாளுமன்றத்தைக் கூட்டவேண்டாம் என ஜனாதிபதி கோரியிருப்பதால் அதற்கு மாறாக எதுவும் செய்யமுடியாதெனவும், அவர் மேலும் அச் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### நேரடிப் பேச்சு...

னர். நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அவரது மாளிகையில் இவர்கள் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடினர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ஹக்கீம் மற்றும் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரை கொழும்பில் சந்தித்து கலந்துரையாடிய ஹெலிகிசன் குழுவினர், இன்று விடுதலைப் புலிகளை சந்திக்கவுள்ளமை முக்கிய விடயம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### சமாதானப்...

புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்ட போது இருந்த நிலை, தற்போது இல்லை. இதனால் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

எனவே, ஜனாதிபதி அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். பறிக்கப்பட்ட அமைச்சுக்கள் பற்றிக் கேட்கவில்லை. நாட்டில் சமாதானம் உருவாகவேண்டும், அதற்கு என்னாலான ஒத்துழைப்பைச் செய்கின்றேன் ஆனால், ஜனாதிபதி அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்.

தேசிய அரசு உருவாக்கப்படுவது குறித்து, என்னுடன் இணைந்துள்ள கட்சிகளுடன் பேசியே முடிவெடுக்க முடியும், இதுகுறித்து நான் எதுவித முடிவும் எடுக்கமுடியாது. அவர்களுடன் பேசிய பின்னர் அவர்கள் சார்பான பிரதிநிதிகளுடன் நீங்கள் பேசுங்கள் எனவும் கேட்டேன என பிரதமர் தெரிவித்தாக நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

### ஜனாதிபதி...

தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்ட திகதிக்கு முன்னதாகவே, நாடாளுமன்றத்தினைக் கூட்டுவது, அரசியல் சாசனத்திற்கு முரணானதாகும். இத்தகைய அரசியல் சாசனத்திற்கு முரணான செயற்பாடுகளுக்கு நாம் ஒரு போதும்அனுமதிக்க மாட்டோம்.

இவ்வாறு அரசியல் சாசனத்திற்கு முரணான, சட்டவிரோதமான நடவடிக்கைக்கு, நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தையோ அல்லது அதிகாரிகளையோ ஈடுபடச் செய்வது சட்டவிரோதமானது.

அரசியல் சாசனத்தை பாதுகாக்கும் வகையில், நாடாளுமனறத்தின் சிறப்புரிமைகளை பேணுவது சபாநாயகரின் பொறுப்பாகும்.

நாடாளுமன்றைக் கூட்டுவதையும், அதற்காக அதிகாரிகளை ஈடுபடச் செய்து, அவர்களைச் சிரமத்திற்கு ஆளாக்குவது தவிர்த்துக் கொள்ளப்படவேண்டியதாகும் எனவும் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் மகிந்த ராஜபக்ஷ, பேரியல் அஷ்ரப், விமல் வீரவன்ச, தினேஷ் குணவர்த்தன, ராஜா கொளுரே ஆகியோர் கையொப்பமிட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# நேற்று மூன்றுமணிநேரம்...

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில், மிகவும் சிநேகபூர்வமானதும், சுமுகமானதாகவும் இந்தப் பேச்சுக்கள் அமைந்திருந்ததாகவும், இந்தச் சந்திப்பு 3 மணி நேரம் நீடித்திருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தச் சந்திப்பின் தொடர்ச்சியாக, அடுத்த வாரமும் இருவரும் சந்தித்துப் பேசுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ். கருணாரட்ன, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், ஜனாதிபதியின் அலுவலக சிரேஷ்ட இயக்குனர் மனோ திட்டவெல ஆகியோரும் கலந்துகொண்டதாக கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியுடன் அடுத்த தடவை பிரதமர் ரணில் சந்திக்கும் போது, ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களான ரவூப் ஹக்கீம், தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோரையும் அழைத்துச் செல்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 95.30 | 96.58 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 158.76 | 161.69 |
| 1 யூரோ | 109.71 | 111.95 |
| 1 சுவிஸ் பிராங் | 69.78 | 71.69 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 67.71 | 69.54 |
| 1 ஜப்பானிய யென் | 00.87 | 00.89 |
| 1 சவூதி றியால் | 25.50 | 25.50 |

யாழ் நகரில்
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்..!!!!!
1.பழுதடைந்த பழைய படங்களை நவீன முறையில் புதுப்பித்து மெருகூட்டல்
2.நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தைப் பிரதியாக்கம்செய்தல்
3.டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்படும் படங்களைப் பிரதியாக்கம் செய்தல்
4.அல்பத்திற்கான முகப்பு அட்டைப்படங்களைத் தயாரித்தல்
ஆகிய சேவைகளை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விஸ்தரித்துள்ளது.
Vista Vision
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்,
52,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
☎:021-2225187

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.11.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.